x,vc:5

# மெய்யறம்

(அரும்பதவுரையுடன்).

---

வ. உ. சிதம்பரம்பிள்ளை

(நூலாசிரியன்).

---

மூன்றாம் பதிப்புகள்

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

---

ஷண்முகவிலாசம் பிரஸ்,

அம்பாசமுத்திரம்.

1930.

0. 12 p

# மெய்யறம்.

## முன்னுரை.

இந்நூலின் முதல் இரண்டு பதிப்புப் பிரதிகள் செலவாகிவிட்டமையாலும், இதனைப் பலர் வேண்டினமையாலும், இதனை மூன்றாம் முறை அச்சிற் பதிப்பிக்கத் துணிந்தேன்

இந்நூலை மாணவரியல், இல்வாழ்வியல், அரசியல், அந்தணரியல், மெய்யியல் என்னும் ஐந்து இயல்களாகப் பகுத்துள்ளேன். அவ்வாறு யான் பகுத்ததற்குக் காரணம் மானுடப்பிறப்பை அடைந்த ஒவ்வொருவரும் முறையே மாணவராய், இல்வாழ்வாராய், அரசராய், அந்தணராய் மெய்ந்நிலையை அடையலாமென்ற எனது கோட்பாடும், அவர்கள் அவ்வாறு அந்நிலைகளை அடையவேண்டுமென்ற எனது விருப்பமுமே.

"பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்; சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமை யான்" என்றபடி பிறப்பால் மனிதரெல்லாரும் ஒரே தன்மைய ரென்பதும், ஒவ்வொருவரும் தாம் தாம் கைக்கொள்ளும் ஒழுக்கங்களுக்குத் தக்கவாறு உயர்வையும் தாழ்வையும் அடைவரென்பதும், அறிவுடையோர் பலரும் கொண்ட கொள்கை.

ஆதலால், இதனை வாசிக்கும் ஒவ்வொருவரும் தத்தம் நிலைக்கு உயர்ந்ததாயுள்ள நிலைக்குரிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு அவ்வுயர்ந்த நிலையை அடைந்து அவ்வாறே ஒவ்வோர் உயர்ந்த நிலையையும் அடைந்து மேம்படுவார்களாக.

கோவிற்பட்டி.
பிரமோதூத ஞு ஆனிமீ 9உ

வ. உ. சிதம்பரம்பிள்ளை.

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 3 | 5 | மதுசேய | மதுசெய |
| ,, | 9 | அன்னைதந | அன்னைதந் |
| 4 | 9 | பொல்லா | பெல்லா |
| 5 | 14 | தகுவது | தருவது |
| 7 | 21 | சய்க | செய்க |
| 12 | 4 | அறியர் | அறியா |
| 13 | 7 | எழுத்தரி | எழுத்தறி |
| ,, | 21 | புலிகடல் | புவிகடல் |
| 18 | | மெய்யறம் என்னும் தலைப்பெயர்க்கும்அதிகாரப்பெயர்க்கும் மத்தியில் இல்வாழ்வியல் என்று ஒரு வரி சேர்த்துக் கொள்க. | |
| 19 | 23 | உண்பண | உண்பன |
| 21 | 20 | அவனேடு | அவனொடு |
| 23 | 10 | யித்தன் | பித்தன் |
| 29 | 2 | பேனல் | பேணல் |
| 30 | 14 | ஹுருககம் | ஹுருக்கம் |
| 31 | 17 | யொருவருந | யொருவருந் |
| 32 | 6 | பிறரூக் | பிறருக் |
| 33 | 13 | சுற்றல் | சுற்றம் |
| 35 | 19 | முருப்ப | முடிப்ப |
| 36 | 12 | ஒற்றில் | ஒற்றிற் |
| ,, | 18 | அழியாயப் | அழியாப் |
| ,, | 19 | பொருளில்லை | பொருளிலை |
| 37 | 10 | காமமும | காமமும் |
| ,, | 12 | அரசவிக | அரசுவிக் |
| 38 | 9 | நன்பருள் | நண்பருள் |
| 40 | 11 | யளித்திட | யழித்திட |
| ,, | 17 | மாமுதற | மாமுதற் |
| 42 | 5 | கமைந்தலோ | கமைத்தலோ |
| ,, | 6 | லமைந்திடல் | லமைத்திடல் |
| 46 | 5 | காட்டுளார் | காட்டுளார்க் |
| 49 | 8 | செய்யும் | செயும் |
| 50 | 14 | வழக்குக | வழக்கு |
| 52 | 15 | தறியவு | தரியவு |
| 53 | 19 | அழிவென | அழிவன |
| 55 | 4 | யணியவு | பணியவு |
| 59 | 19 | மனித | மடித |
| 61 | 9 | கொலைமுக | கொலைமுத |
| 65 | 3 | உயரியல் | உயிரியல் |
| ,, | 6 | யுதவல் | வுதவல் |

# மெய்யறம்

---

## சமர்ப்பணம்.

உலக மனைத்தினு மொளிமிக வுடைய
நாவலந் தீவெனு மாவல மகளின்
முகமென விளங்கும் பாரதகண் டத்தின்
செவ்விய நுதலாஞ் செந்தமிழ் நிலத்தின்
திலக மாமென விலகுபுன னாட்டின்
செஞ்சொலார் பெருகுந் தஞ்சைமா நகரில்
தாளாண்மை செய்து வேளாண்மை புரியும்
கார்காத் தாருட் சீர்மிக வாய்ந்த
நற்குடிப் பிறந்து பொற்புற வளர்ந்து
தமிழுமாங் கிலமுஞ் சால்புறக் கற்று
நடுவு புரிந்து நற்புகழ் பெருக்கி
இராசாங் கத்தார் இராவ்பக தூரெனும்
பட்டம் வழங்கப் பண்புடன் பெற்றுத்
தமிழினை வளர்த்துத் தமிழ்நா டளித்த
வலனார் சீனி வாச பிள்ளை
யவர்க ளீகை யாகிய நற்செயல்
கண்டுள மகிழ்ந்தவர் கட்குத்
தகவொடு மெய்யறம் சமர்ப்பித் தேனே.

வ. உ. சிதம்பரம்பிள்ளை.

---

# மெய்யறம்

## இயல் அதிகார அகராதி.


| இயல். | பக்கம். |
|---|---|
| அந்தண ரியல். | 58 |
| அரசியல். | 33 |
| இல்வாழ் வியல். | 18 |
| மாணவ ரியல். | 3 |
| மெய்யியல் | 63 |

| அதிகாரம். | பக்கம். |
|---|---|
| அச்ச மொழித்தல். | 26 |
| அடக்க முடைமை. | 15 |
| அந்தண ரியல்பு. | 58 |
| அந்தண ரொழுக்கம். | 58 |
| அமர் செய்தல். | 54 |
| அமர் துணிதல் | 53 |
| அமர்த் திட்பம் | 51 |
| அமர் வகை. | 51 |
| அமைச் சாளுதல். | 37 |
| அரசு கொள்ளல். | 55 |
| அரசு நலம். | 33 |
| அரண். | 41 |
| அரணமைத்தல். | 42 |
| அரணளித்தல். | 42 |
| அரியவை பெறுதல். | 40 |
| அருள் புரிதல். | 62 |
| அவர்பா லொழுகல். | 39 |
| அழுக்கா றொழித்தல் | 12 |
| அறம் புரிதல். | 57 |
| அறிந்து சொல்லல். | 37 |
| அறிவுடைமை. | 16 |
| அன்பு வளர்த்தல். | 30 |
| ஆகா நட்பு. | 49 |
| ஆசிரியரை யடைதல். | 6 |
| இகல். | 49 |
| இடனறிதல். | 53 |
| இடுக்க ணழியாமை. | 27 |
| இரவு விலக்கல். | 10 |
| இல்லமைத்தல். | 18 |
| இல்வாழ் வுயர்வு | 18 |
| இறை கொள்ளல். | 56 |
| இன்பந் துய்த்தல். | 20 |
| இன்னா செய்யாமை. | 61 |
| ஈகை புரிதல். | 32 |
| உடம்பை வளர்த்தல். | 7 |
| உயிர்த்துணை கொள்ளல் | 19 |
| உயிர்த்துணையாளுதல். | 19 |
| உரை நூ லாளுதல். | 36 |

# அதிகார அகராதி.


| அதிகாரம். | பக்கம். |
|---|---|
| உழவு. | 44 |
| உற்றாரைப் பேணல். | 28 |
| ஊக்க முடைமை. | 17 |
| எண்ணெழுத் தறிதல். | 13 |
| ஒப்புர வொழுகல். | 31 |
| ஒழுக்க முடைமை. | 16 |
| ஒற்றாளுதல். | 36 |
| கண்ணோட்டம். | 34 |
| களவு விலக்கல். | 9 |
| காமம் விலக்கல். | 20 |
| கால மறிதல். | 52 |
| குடி புரத்தல். | 56 |
| குறிப்புணர்வுடைமை. | 39 |
| கூடா வொழுக்கம். | 59 |
| கைத் தொழில். | 45 |
| கொலை விலக்கல். | 8 |
| சிற்றினம் விலக்கல். | 22 |
| சுற்றம் பெருக்கல். | 33 |
| சூது விலக்கல். | 9 |
| சூழ்ச்சி புரிதல். | 34 |
| செய்வினை யாளுதல். | 35 |
| செருக்கொழித்தல். | 26 |
| தவஞ் செய்தல். | 61 |
| தன்னை யறிதல். | 6 |
| தன்னைப் பேணல். | 28 |
| தாய்தந்தையரைத் தொழுதல். | 4 |
| திருந்தச்செய்தல். | 14 |
| தீயினம் விலக்கல். | 5 |
| துயிலொழித்தல். | 25 |
| தெரிந்து தெளிதல். | 35 |
| தொழிலறிதல். | 13 |
| நடுவுநிலைமை. | 15 |
| நட்பு. | 48 |
| நல்லினஞ் சேர்தல். | 5 |
| நன்றி யறிதல். | 14 |
| நாடு. | 40 |
| நாட்டுச்சிறப்பு. | 41 |
| நெடுநீரொழித்தல். | 24 |
| பகைமை. | 50 |
| பகையடு நெறி. | 50 |
| படை. | 45 |
| படைக்கலம். | 46 |
| படையமைத்தல். | 47 |
| படை யளித்தல். | 47 |
| படை வகை. | 46 |
| பண்பு செய்தல். | 38 |
| பயனில்சொல் விலக்கல். | 12 |
| பழமை. | 48 |
| பற்றுளம் விடுதல். | 27 |
| புகழ் செய்தல். | 32 |
| புதல்வரைப் பேணல். | 30 |
| புலால் விலக்கல். | 8 |
| புறஞ்சொல்லல் விலக்கல். | 11 |
| பெரிய வரசரைச் சேர்தல். | 38 |
| பெரியாரைத் துணைக் கொளல். | 22 |

# அதிகார அகராதி.


| அதிகாரம். | பக்கம். |
|---|---|
| துறவடைதல். | 62 |
| தூது விடல். | 54 |
| பரத்தையை விலக்கல். | 21 |
| பரத்தனை விலக்கல். | 21 |
| பொய்ம்மை விலக்கல். | 11 |
| பொருட்சிறப்பு. | 43 |
| பொருள். | 43 |
| பொறுமை கொள்ளல். | 31 |
| மடி யொழித்தல். | 25 |
| மயக்குவ விலக்கல். | 10 |
| மறவி யொழித்தல். | 24 |
| மனத்தை யாளுதல். | 7 |
| மாணவர் கடமை. | 3 |
| மானங் காத்தல். | 59 |
| முயற்சி யுடைமை. | 17 |
| முறை செய்தல். | 57 |
| முன்னோரைப்பேணல். | 29 |
| பேதைமை யொழித்தல். | 23 |
| மெய்ந்நிலை யடைதல். | 65 |
| மெய்யின் அடக்கநிலை. | 63 |
| மெய்யுணர்தல். | 64 |
| மெய்யுண்மை. | 63 |
| மெய்யைத்தொழுதல். | 4 |
| மெய்யின் விளக்கநிலை. | 64 |
| வலி யறிதல். | 52 |
| வாணிகம். | 44 |
| விதியிய லறிதல். | 3 |
| விருந்தினரைப் பேணல். | 29 |
| வெஃகாமை. | 60 |
| வெகுளாமை. | 60 |
| வெண்மையொழித்தல். | 23 |
| வெற்றி யடைதல். | 55 |

# மெய்யறம்.

---

## சிறப்புப் பாயிரம்

மெய்யற மியற்றினேன் வையமோர் சிதம்பரம். க
வள்ளுவ ரெல்லையிம் மறைக்கு மெல்லையாம். உ
மடியருங் கேட்கவோ ரடியால் யாத்தனன். ௩
நுதலிய தறவழி முதனிலை யடைதல். ௪
அறம்பொரு ளின்பம்வீ டடைதல் பயனே. ரு
விரோதி கிருதுவில் விளம்பப் பெற்றது. ௬
கண்ணனா ரண்மனை யெண்ணியாத் திடுகளம். எ
ஆன்றமா தேவ னகமாங் கேற்றிடம். அ
ஏனழுங் கற்குமா றியற்றப் பட்டது. ௯
மெய்யற மென்றும் வையகத் துலாவுக. ௰

**சகஜாநந்தன்.**

# மெய்யறம்.

## பாயிரம்.

மெய்ப்பொரு ளருளான் மெய்யற மாகுக. க
வள்ளுவர் மறையின் வழிநூன் மெய்யறம். உ
அறநூல் கற்றுரைத் தாற்றுவோ னுவல்வோன். ௩
மேற்கோ ளாதியால் விளக்குத னுவறிறன். ௪
மெய்யோ பொருளோ வேண்டுவோன் கொள்வோன். ௫
கொளுந்திறன் கசடறக் கொண்டுகன் கொழுகல். ௬
மெய்யறம் பொருளொடு மெய்யருள் சேர்க்கும். ௭
பொய்யறம் புணர்ந்தகாற் புரிந்தனன் மெய்யறம். ௮
பொய்யற மொழிந்திவண் மெய்யற நிலவுக. ௯
மெய்யறஞ் செய்துயிர் மெய்ப்பொரு ளாகுக. ௰

# மெய்யறம்.

## மாணவ ரியல்.

### முதல் அதிகாரம்.—மாணவர் கடமை.

மாண்பெற முயல்பவர் மாணவ ராவர். க
ஆணும் பெண்ணு மதுசெய வுரியர். உ
இளமைப் பருவ மியைந்த ததற்கே. ங
மற்றைய பருவமும் வரைநிலை யிலவே. ச
அவர்கடன் விதியிய லறிந்துநன் குற்றல். ரு
அன்னைதந் தையரை யாதியைத் தொழுதல். சா
தீயினம் விலக்கி நல்லினஞ் சேர்தல். எ
தக்கவா சிரியராற் றன்னிய லறிதல். அ
ஒழுக்கமுங் கல்வியு மொருங்குகைக் கொள்ளல். கூ
இறைவ னிலையினை யெய்திட முயறல். ய

### உ-ம் அதி.—விதியியல் அறிதல்.

வினையின் விளைவே விதியென வந்துறும். கக
விதிசெய் கர்த்தா வினைசெய் யுயிரே. கஉ
மெய்ப்பொருள் வினையை விளைத்துயிர்க் கீயும். கங
தீவினை விளைவிற் சேருவ துன்பம். கச
நல்வினை விளைவி னணுகுவ வின்பம். கரு
தீவிதி வரவைச் செபபு மடன்மடி. கசா
நல்விதி வரவை நவிலுமறி வூக்கம். கஎ
விதியை மாற்றிட வினையை மாற்றுக. கஅ
தீவிதி வேண்டிற் றீவினை புரிக. ககூ
நல்விதி வேண்டி னல்வினை புரிக. உ0

# மெய்யறம்

## ௩-ம் அதி.— தாய்தந்தையரைத் தொழுதல்.

தாயுந் தந்தையுந் தம்முதற் றெய்வம். ௨௧
அவரிற் பெரியர் யாருமிங் கிலரே. ௨௨
அவரடி முப்பொழு தறுதினந் தொழுக. ௨௩
அவர்பணி யெல்லா மன்பொடு செய்க. ௨௪
அவருரை யெல்லா மறிந்துளங் கொள்க ௨௫
அவர்பொருள் செய்தற் காந்துணை புரிக. ௨௬
அவர்நட் பெல்லா மவர்போற் கொள்ளுக. ௨௭
அவர்பகை யெல்லா மவர்போற் றள்ளுக. ௨௮
அவர்பெயர் விளங்கிட வறிந்தமைந் தொழுகுக. ௨௯
இல்வாழ் வாசிற் கியைந்தவ ராகுக. ௩௦

## ௪-ம் அதி.—மெய்யைத் தொழுதல்.

மெய்யுல கெல்லாஞ் செய்முதற் கடவுள். ௩௧
உலகப் பொருட்கெலா முயிரென நிற்பது. ௩௨
அறிவா யெங்கணுஞ் செறிவா யமைந்தது. ௩௩
பகுத்தறி யுயிர்வினைப் பயனதற் களிப்பது. ௩௪
உலகந் தனதரு ணலனுற வாள்வது. ௩௫
தொழுமுறை யதனைமுப் பொழுது முள்ளல். ௩௬
உள்ளியாங் குறங்கி யுள்ளியாங் கெழுதல். ௩௭
எம்மதக் கடவுளுந் தம்ம தெனக்கொளல். ௩௮
உலகி லதனடு வோர்ந்து நிற்றல். ௩௯
அந்தண ராகி யதனிலை யடைதல். ௪௦

## ரு-ம் அதி.—தீயினம் விலக்கல்.

தீதெலாந் தருவது தீயினத் தொடர்பே. சக
தீயவர் நல்லுயிர் சிதைக்குங் கொடியர். சஉ
பிறர்பொருள் வவ்வும் பேதை மாக்கள். சந
துணைவரல் லாரை யணையுமா வினத்தர். சச
அறிவினை மயக்குவ வருந்து மூடர். சரு
புரைவளர் பொய்ம்மை புகலுந தீயர். சசா
அறனொடு பொருளோ வழிக்குங் கயவர். சஎ
பசுவின் செயலைப் பதியென தென்போர். சஅ
இத்திறத் தாரோ டிணங்கி நிற்போர். சகூ
தீயின மெல்லா நோயென விலக்குக. ருo

## சா-ம் அதி.—நல்லினஞ் சேர்தல்.

நன்றெலாந் தருவது நல்லினத் தொடர்பே. ருக
நல்லவர் மெய்ந்நிலை நண்ணி நிற்போர். ருஉ
அகத்துற வுற்றுமெய் யறிந்து நிற்போர். ருந
தவமு மொழுக்கமுந் தாங்கி நிற்போர். ருச
நன்னினைப் புரைசெயன் மன்னி நிற்போர். ருரு
உலகிய லெல்லா முணர்ந்து நிற்போர். ருசா
அறனொடு பொருளோ வாக்கி நிற்போர். ருஎ
பசுவினைப் பயன்பதி பயக்குமென்போர். ருஅ
இத்திறத் தாரோ டிணங்கி நிற்போர். ருகூ
தினமு நல்லினந் தெரிந்துசேர்ந் திடுக. சாo

## மெய்யறம்

### எ-ம் அதி.—ஆசிரியரை யடைதல்.

அறிவினைத் தருபவ ராமா சிரியர். ௬௧
இருபா லாருந் தருவதற் குரியர். ௬௨
அறிவு வகையா னாசிரி யர்பலர். ௬௩
எவர்க்கு மொழுக்க மின்றியமை யாதது. ௬௪
அவர்கடன் மாணவ ரறிதிற னறிதல். ௬௫
நல்வினை விரும்பு நல்லவர்க் கோடல். ௬௬
மாணவர் தமைத்தம் மகாரெனப் பேணல். ௬௭
அறிந்தவை யெல்லாஞ் செறிந்திடச் சொல்லல். ௬௮
சொல்லிய செய்யவும் வல்லுந ராக்குதல். ௬௯
அறிந்தா சிரியரை யடைந்தெலா மறிக. ௭0

### அ-ம் அதி.—தன்னை யறிதல்.

தன்னை யறித றலைப்படுங் கல்வி. ௭௧
மனிதரி னுடம்பு மனமான் மாவுள. ௭௨
தோன்முதற் பலவின் றொகுதிகா னுடம்பு. ௭௩
உடம்பெலா நிற்கு முயரறி வுரன்மனம். ௭௪
உடம்பு மனமுமா ளுயரறி வான்மா. ௭௫
ஆன்மா மனமுட றூன்றன் வலிதனு. ௭௬
மெய்ம்முத லியமனம் வெளிச்செலும் வாயில். ௭௭
உடன்மனத் தின்பி னோடு மியலது. ௭௮
மனமற வறநெறி மருவு மியலது. ௭௯
ஆன்மா மனத்தை யறநெறி யுய்ப்பது. ௮0

## மாணவரியல்

### ௯-ம் அதி.—மனத்தை யாளுதல்.

மனமுத் தொழில்செயு மாபெருஞ் சத்தி. ௮௧
நினைக்குந் தொழிலை நிதமுஞ் செய்வது ௮௨
அறனு மறனு மறிதிற னிலாதது. ௮௩
அதனெறி விடுப்பி னழிவுடன் கொணரும். ௮௪
அதனெறி விடாஅ தாளுத றன்கடன். ௮௫
தானதிற் பிரிந்து சந்தத நிற்க. ௮௬
எதையது நினைத்ததோ வதையுடன் காண்க. ௮௭
மறமெனில் விலக்குக வறமெனிற் செலுத்துக. ௮௮
பயனிலவெண்ணிற் பயனதிற் றிருப்புக. ௮௯
ஒன்றெண்ணும் பொழுதுமற் றொன்றெண விடற்க. ௯௦

### ௰-ம் அதி.—உடம்பை வளர்த்தல்.

உடம்பெலாஞ் செய்யு மொப்பிலாக் கருவி. ௯௧
உடம்பை வளர்த்தலஃ துரமுறச் செய்தல். ௯௨
உடம்புநல் லுரமுறி னுலகெலா மெய்தும. ௯௩
உரனிலா வுடம்பு வானிலா மங்கை ௯௪
உளந்தொழில் செயற்கு முடலுரம் வேண்டும். ௯௫
வளியன னீரதி லளவி னுறச்செயல். ௯௬
மாறுபா டிலாவூண் மறுத்துமுப் பொழுதுணல். ௯௭
சிலம்பமெய்ப் பயிற்சிக டினந்தொறுஞ் சய்க. ௯௮
பிணியுறி னுடன்பல தீர்த்தான் மருந்துணல். ௯௯
நினைந்த படியுடல் வளைந்திட வளர்க்க. ௧௦௦

# மெய்யறம்

## கக-ம் அதி.— கொலை விலக்கல்.

கொலையுயிர் தனையத னிலையினின் றொழித்தல். ௧௦௧
வாழு முயிர்நிதம் வருந்த வதைத்தல். ௧௦௨
அச்செய றாண்டுத லச்செயற் குதவுதல். ௧௦௩
இயலு மிடத்தச் செயலைத் தடாமை. ௧௦௪
படுமுயி ரறிவுபோற் படிப்படி கொடிததாம். ௧௦௫
கொலைபா தகங்களுட் டலையாய தென்ப. ௧௦௬
அதுபல பிறப்பினு மருந்துயர் விளைக்கும். ௧௦௭
தொழுநோய் வறுமையோ டழுநோய்பெருக்கும். ௧௦௮
கொலைபுரி வார்க்கிங் கிலைபதி யருளே. ௧௦௯
கொலையினை விலக்கினோர்க் கூற்றமும் விலக்கும். ௧௧௦

## கஉ-ம் அதி.—புலால் விலக்கல்.

புலால்புழு வரித்தபுண் ணலால்வே றியாதோ? ௧௧௧
புண்ணைத் தொடாதவர் புலாலையுட் கொள்வதென்? ௧௧௨
அதுவலி தருமெனின் யானையஃ துண்டதோ? ௧௧௩
அரிவலி பெரிதெனி னதுநமக் காமோ? ௧௧௪
அன்றியும் வலியோ வறிவோ சிறந்தது? ௧௧௫
வலியோ டறிவினை மக்களென றாதுகொல்? ௧௧௬
மக்களு ணுணது மறிமுத லுண்பதென்? ௧௧௭
பொறியறி விலார்க்கு மறிமுதற் றாழ்ந்தவோ? ௧௧௮
அவைகொன் றுண்பார்க் கருளுண் டாமோ? ௧௧௯
அருளிலா ரருண்மயப் பொருணிலை யடைவரோ? ௧௨௦

## மாணவ ரியல்.

### கங-ம் அதி.—களவு விலக்கல்.

களவுடை யவர்தரா துளமொடொன் றெடுத்தல். கஉக
வஞ்சித் துக்கொளல் வாங்கிக் கொடாமை. கஉஉ
களவினை யேவுதல் களவிற் குதவுதல் கஉங
தடுக்கக் கூடிய விடத்ததைத் தடாமை கஉச
உடையவர் நலத்தையொத் துருக்கொளு மிம்மறம். கஉரு
களவினைக் கள்ளரு மெள்ளுவர் பிறர்முன். கஉசா
கள்ளுநர் தடுப்பவர்க் கொல்லவும் துணிவர். கஉஎ
கள்ளுந ருடையாராற் கொல்லவும் படுவர். கஉஅ
களவினாற் பலபிறப் பளவிலா வறுமையாம். கஉகூ
களவினை விலக்கினார்க் களவிலாச் செல்வமாம். கஙய

### கச-ம் அதி.—சூது விலக்கல்.

சூதுவஞ் சனையதற் கேதுவாங் கருவி. கஙக
பந்தயங் குறிக்கும் பலவினை யாடல். கஙஉ
அதுபொரு டருதல்போ லனைத்தையும் போக்கும். கஙங
உற்றவூ ணுடைமுதல் விற்றிடச் செய்யும் கஙச
பொறையு மறிவும் புகழுங் கெடுக்கும். கஙரு
சூதர்தஞ் சேர்க்கையாற் சூதினைப் புக்கிடும். கஙசா
சூதரா தியரைத் தூர நிறுத்துக. கஙஎ
காலங் கழித்திடக் கவறுகை யெடுப்பர். கஙஅ
அதனினு மாலமுண் டழிதனன் றென்க. கஙகூ
கவறுருள் களத்தைக் கனவினுங் கருதேல். கசய

# மெய்யறம்

## கரு-ம் அதி.—இரவு விலக்கல்.

இரவென் பதுபிறர் தரவொன் றேற்றல். கசக
இரவினிற் றாழ்ந்ததொன் றிலையென மொழிப. கசஉ
இரவினிற் களவு மேற்றமா மென்ப. கசங
இரந்திடப் படைத்தவன் பரந்தழி கென்ப. கசச
இரந்துயிர் வாழ்தலி னிறத்தனன் றென்ப. கசரு
அவருரை யெல்லா மழியா வுண்மை. கசசு
இரந்துயிர் வாழ்தலிங் கிழிவினு ளிழிவே. கசஎ
தமக்குவாழ் வாரதிற் சாதலு நன்றாம். கசஅ
பிறர்க்குவாழ் வாரதாற் பிழைத்தலு நன்றாம். கசகூ
அவரு மதைவிடி னரும்பெருஞ் சிறப்பாம். கருO

## கசு-ம் அதி.—மயக்குவ விலக்கல்.

மயக்குவ வறிவினை மயக்கும் பொருள்கள். கருக
அவைகள் கஞ்சா வபின்முத லாயின. கருஉ
அறிவுதம் முயிரோ யாதியே யுலகே. கருங
அறிவினை மயக்குத லவற்றை யழித்தலே. கருச
அறிவினை மயக்குவா ரருமறம் புரிவர். கருரு
மயக்குவ சிலபிணி மாய்க்குமென் றுண்பர். கருசு
மயக்காத வுண்டவை மாய்த்தலே யுத்தமம். கருஎ
மயக்குவ வலியினை வழங்குமென் றுண்பர். கருஅ
வலியினை வழங்கல்போல் வலியெலாந் தொலைக்கும். கருகூ
ஆதலான் மயக்குவ வற்பமுங் கொண்டிடேல். கசுO

# மாணவ ரியல்.

## ௧௭-ம் அதி.—பொய்ம்மை விலக்கல்

நிகழா ததனை நிகழ்த்துதல் பொய்ம்மை. ௧௬௧
நிகழ்வதை யங்ஙன நிகழ்த்துதல் வாய்மை. ௧௬௨
தீமையைத் தருமெனின் வாய்மையும் பொய்ம்மையாம் ௧௬௩
புரைதீர் நலந்தரின் பொய்ம்மையும் வாய்மையாம். ௧௬௪
வாய்மையைத் தருவதே வாயென வறிக. ௧௬௫
மற்றவை யெலாம்வெறும் வாயிலென் றறிக. ௧௬௬
வாய்மை யகத்தது தூய்மையை வளர்க்கும். ௧௬௭
பொய்ம்மை யகத்தது புரையினை வளர்க்கும். ௧௬௮
பொய்ம்மையை யாள்பவர் புன்னர காழ்வர் ௧௬௯
பொய்ம்மை யொரீஇயவர் புகழ்வீ டடைவர். ௧௭௦

## ௧௮-ம் அதி.—புறஞ் சொல்லல் விலக்கல்.

புறஞ்சொலல் பிறரைப் புறத்திழித் துரைத்தல். ௧௭௧
அறங்கொலு மறத்திற் புறஞ்சொலல் கொடிது. ௧௭௨
புறஞ்சொலல் பொய்முதற் புரையெலாம் வளர்க்கும். ௧௭௩
புறஞ்சொலல் புறனெலாம் பொருபகை யாக்கும். ௧௭௪
புன்மகார் செயல்களுட் புறஞ்சொல லொன்று. ௧௭௫
புறஞ்சொலு நாவினை யறஞ்சொலல் வஞ்சம். ௧௭௬
புறஞ்சொலு நாவினர்க் கறஞ்சொலன் மடமை. ௧௭௭
புறஞ்சொலல் கேட்டலும் புன்மையென் றறிக. ௧௭௮
புறஞ்சொலி வாழ்தலிற் பொன்றன னென்ப. ௧௭௯
ஆதலாற் புறஞ்சொல லடியொடு விடுக. ௧௮௦

## மெய்யறம்

### கசு-ம் அதி.—பயனில் சொல் விலக்கல்.

பயனில்சொல் யார்க்கும் பயன்றாச் சொல்லே. கஅக
அறியார் மையினின் றச்சொல் பிறக்கும். கஅஉ
அறியா மையினை யச்சொல் வளர்க்கும். கஅங
அறிவினர் நட்பெலா மச்சொல் குறைக்கும். கஅச
அறிவிலார் நட்பினை யச்சொல் பெருக்கும். கஅரு
பயனுள சொல்லினைச் சொலவிடா தச்சொல். கஅசா
பயனுள செயலினைச் செயவிடா தச்சொல். கஅஎ
பயனில சொல்லுவர் நயனுறு ரென்றும். கஅஅ
பயனில சொல்பவர் பதடியென் றறைப. கஅகூ
பயனில விலக்கிப் பயனுள சொல்லுக. ககூ0

### உ0-ம் அதி.—அழுக்கா றொழித்தல்.

அழுக்கா றயலா ராக்கத்திற் புழுங்கல். ககூக
அழுக்கா றறலினே ரிழுக்கா றிலதே. ககூஉ
அழுக்கா றதுபோ லழிப்பதொன் றின்றே. ககூங
அழுக்கா றுளவரை யொழுக்கா றிலையே. ககூச
அழுக்கா றுடையார்க் காக்கமின் றாகும். ககூரு
வறுமையும பசியுஞ் சிறுமையு முளவாம். ககூசா
அழுக்கா றுடைமைகீழ் வழுக்கா றென்ப. ககூஎ
விலங்குளு மழுக்கா றிலங்குத லில்லை. ககூஅ
அறிவுடை மக்க ளதுகொளல் புதுமை. ககூகூ
அழுக்கா றுளத்தரு தறுதின மோம்புக. உ00

## மாணவ ரியல்.

### உக-ம் அதி.—எண்ணெழுத் தறிதல்.

எண்ணெனப் படுவ தெண்ணூற் கணிதம். உ0க
எழுத்தெனப் படுவ திலக்கிய மிலக்கணம். உ0உ
எண்ணு மெழுத்துங் கண்ணென மொழிப. உ0ங
எண்ணறி யார்பொரு ளெய்துத லரிது. உ0ச
எழுத்தறி யார்பிற வெய்துத லரிது. உ0ரு
எண்ணெழுத் தறிந்தா ரெய்துவர் நான்கும். உ0சா
எண்ணு மெழுத்து மிடைவிடா தாள்க. உ0எ
அவைதாய் மொழிகொளி னதைமுன் பறிக. உ0அ
பின்பவை மிக்குள பிறமொழி யறிக. உ0கா
அறிவதைக் கசடற வறிந்துகொண் டொழுகுக. உக0

### உஉ-ம் அதி.—தொழில் அறிதல்.

மெய்யுறுப் புக்கொடு செய்வது தொழிலே. உகக
தொழிலா லுலகந் தோன்றிநிற் கின்றது. உகஉ
தொழிலிலை யெனிலுல கழிவது திண்ணம். உகங
தொழிலிலார் வறுமையுற் றிழிவெலா மடைவர். உகச
அரியநற் றொழில்சில வறிதல்யார்க் குங்கடன். உகரு
படைக்கல மனைத்தும் பண்பொடு பயில்க. உகசா
படைவகுத் தமர்செயு நடையெலா மறிக. உகஎ
புலிகடல் விண்மிசை போவலூர்ந் தறிக. உகஅ
எவ்வகை யுருவு மெடுத்திடப் பழகுக. உககா
உழவுவா ணிகங்கைத் தொழில்சில வறிக. உஉ0

# மெய்யறம்

## உங-ம் அதி.—திருந்தச் செய்தல்.

திருந்தச் செயலியல் பொருந்தச் செய்தல். உஉக
அழகு நிறைவு மமைவுறச் செய்தல். உஉஉ
திருந்தச் செய்தலே செய்தற் கிலக்கணம். உஉங
திருந்தச் செயல்பல சீர்களைக் கொணரும். உஉச
திருத்தமில் செயலாற் சீர்பல நீங்கும். உஉரு
சிறுதொழி லெனினுந் திருந்தவே செய்க. உஉசா
சிறுதொழிற் றொகுதியே பெருந்தொழி லாவது. உஉஎ
செய்யும் தொழிலிலே சிந்தையைச் செலுத்துக. உஉஅ
தொழிலினைக் கியமாய்த் துரிதமாச் செய்க. உஉகூ
பிறர்செய் தொழிற்குப் பின்னிடா வகைசெயல். உஙO

## உச-ம் அதி.—நன்றி யறிதல்.

நன்றியென் பதுபிறர் நல்கிடு முதவி. உஙக
உறவினர் முதலியோ ருதவுதல் கடனே. உஙஉ
பிறர்செயு முதவியிற் பெரிதொன் றின்றே. உஙங
உதவியிற் சிறந்த துற்றுழி யுதவல். உஙச
உயர்ந்தது கைம்மா றுகவா துதவல். உஙரு
அறிதலெஞ் ஞான்று மதைநினைந் தொழுகல். உஙசா
உதவியோர் குடியெலா முயர்வுற வுள்ளல். உஙஎ
உதவியோ ரறவுரை யுடனிறை வேற்றல். உஙஅ
உதவியோர் மிகைசெயி னுடனதை மறத்தல். உஙகூ
அறிதற் களவுண் டுதவி சொலக்கெடும். உசO

## மாணவ ரியல்.

### ௨௫-ம் அதி.—நடுவு நிலைமை.

நடுவு நிலைமைதன் னடுவு னிற்றல். ௨௪௧
பிறவுயிர் நடுவள வுறனடு வின்மை. ௨௪௨
நடுவறப் பொருளி னடுநிற் கும்பொருள். ௨௪௩
அறனெலா நிற்பதற் கஃதா தாரம். ௨௪௪
அதுசிறி தசையி னறனெலா மழியும். ௨௪௫
நடுவினு னிற்பவர் நலனெலாம் பெறுவர். ௨௪௬
நடுவினை விடாரை நானிலம் விடாது. ௨௪௭
நடுவிகந் தாருடன் கெடுவது திண்ணம். ௨௪௮
நடுவிகந் தாரை நரகமும் விடாது. ௨௪௯
ஆதலா னடுவி லசையாது நிற்க. ௨௫௦

### ௨௬-ம் அதி.—அடக்க முடைமை.

அடக்க மனம்புலத் தணுகா தடக்கல். ௨௫௧
அறிவினர்க் கென்று மடங்கி யொழுகல். ௨௫௨
அடக்கநன் னெறியி னடக்கச் செய்யும். ௨௫௩
அடக்கமில் லாமை யதைக்கடக் கச்செயும். ௨௫௪
அடக்கம் பல்வகை யாக்கமுந் தருமே. ௨௫௫
அடக்க மிலாமை யழிவெலாந் தருமே. ௨௫௬
அடக்கமெய் வீட்டிற் கடிப்படி யாகும். ௨௫௭
அப்படி யேறினு ரடைவரவ் வீடு. ௨௫௮
அப்படி யேறா ராழ்வர்வெந் நரகு. ௨௫௯
ஆதலா லடக்க மநுதின மோம்புக. ௨௬௦

# மெய்யறம்

## உஎ-ம் அதி.—ஒழுக்க முடைமை

ஒழுக்க மென்ப துயர்ந்தோர் நடையே. உசுக
அருளறி வமைந்தவை யாள்பவ ருயர்ந்தோர். உசுஉ
அவர்நடை பெரியோர்க் கடங்கி யொழுகல். உசுங
இருக்கை யெழுத லெதிர்பின் செல்லல். உசுச
நினைவுஞ் சொல்லும் வினையுமொன் றாக்கல். உசுரு
மறநெறி விலக்கி யறநெறி செல்லல். உசுசு
தானுற வேண்டுவ வேனோர்க் களித்தல். உசுஎ
தன்னுயிர் போல மன்னுயிர்ப் பேணல். உசுஅ
பகைசெய் தவரொடு நகைசெய் தளாவல். உசுகூ
உயிரெலா மெய்யென வோர்ந்தவை யோம்பல். உஎ௦

## உஅ-ம் அதி.—அறிவுடைமை.

அறிவு மறமொரீஇ யறத்தின்பா லுய்ப்பது. உஎக
அறிவெஞ் ஞான்று மற்றங் காப்பது. உஎஉ
அறிவு பகைவரா லழிக்கப் படாதது. உஎங
அறிவினை யுடையா ரனைத்து முடையர். உஎச
அறிவில் லாதார் யாதுமில் லாதார். உஎரு
அறிவிற் கறிகுறி யாவன செய்தல். உஎசு
எளியவாச் செலவுரைத் தரியவை யுணர்தல். உஎஎ
பாவம் பழிக்குப் பயந்திவ ணொழுகல். உஎஅ
உலகினோ டென்று மொத்து நடத்தல். உஎகூ
எதிரதாக் காத்தெவ் வின்பமு மடைதல். உஅ௦

# மாணவ ரியல்.

## ௨௯-ம் அதி.—ஊக்க முடைமை.

ஊக்க முயர்வுற வுறுமன வெழுச்சி. ௨௮௧
ஊக்க முடைமை யுலகெலாங் கொணரும். ௨௮௨
ஊக்க மிலாமை யுடையவும் போக்கும். ௨௮௩
ஊக்க முடையா ருயர்ந்தோ ராவர் ௨௮௪
ஊக்க மிலாதா ருயிர்க்கும் பிணங்கள். ௨௮௫
உயர்ந்தவை யெவையோ வவையெலா முள்ளுக. ௨௮௬
அவற்றினு ளொன்றை யடைந்திட விரும்புக. ௨௮௭
அதனை யடையு மாறெலா மெண்ணுக. ௨௮௮
ஒவ்வொன் றினுமுறு மூறெலா மெண்ணுக. ௨௮௯
ஊறொழித் தகையுறு முபாயமுங் கருதுக. ௨௯௦

## ௩௰-ம் அதி.—முயற்சி யுடைமை.

உயர்வுற வுழைக்கு முடற்றொழில் முயற்சி. ௨௯௧
முயற்சி பலவகை யுயர்ச்சி நல்கும். ௨௯௨
முயற்சி யூழையு முதுகிடச் செய்யும். ௨௯௩
முயற்சி யுடையார் மூவுல காள்வர். ௨௯௪
முயற்சி யிலாதா ரிகழ்ச்சி யடைவர். ௨௯௫
ஊக்கிய வொன்றனை யுடன்கொளத் துணிக. ௨௯௬
அதிகவூ றுறுநல் லாற்றின் முயல்க. ௨௯௭
உறுமூ றொழித்தறி வுரங்கொடு தொடர்க. ௨௯௮
தவறினுந் தாழ்ப்பினுந் தளர்ச்சியெய் தற்க. ௨௯௯
முயற்சியின் விரிமுத னூலினு ளறிக. ௩௦௦

மாணவரியல் முற்றிற்று.

# மெய்யறம்

## ௫௧-ம் அதி.—இல்வாழ் வுயர்வு.

இல்வாழ் வென்பதோ ரில்லினில் வாழ்தல். ௫௦௧
எதிர்பாற் றுணையுடன் வதிதன் மிகநலம். ௫௦௨
இல்வாழ் வார்கட னில்லற மியற்றல். ௫௦௩
என்றும்வே ளாண்மை யியற்றலே யில்லறம். ௫௦௪
இல்வாழ் வில்லெனி னில்லையிவ் வுலகே. ௫௦௫
இன்னிலை யெவற்றினு நன்னிலை யென்ப. ௫௦௬
எந்நிலை யவர்க்கு மில்வாழ் வார்துணை. ௫௦௭
அந்நிலைப் பெருக்கே யாசென வறிக. ௫௦௮
அதற்கா நன்முத லன்பெனும் பொருளே. ௫௦௯
அதிலாம் பயன்க ளறமுத னான்கே. ௫௧௦

## ௫௨-ம் அதி.—இல் லமைத்தல்.

அகல நீள மரைக்கான் மைல்கொளல். ௫௧௧
ஈரிரு புறமதி லெதிரெதிர் வழிசெயல். ௫௧௨
மத்தியிற் புறமதின் மட்டமே லிற்செயல். ௫௧௩
இல்லிற் கீரா யிரமடி சதுரமாம். ௫௧௪
நிலமேன் மதிற்கு நேர்கால் கீழ்செயல். ௫௧௫
வளியன னீரமா வழியா வகைசெயல். ௫௧௬
வளியொளி யளவினுள் வரச்செல வழிசெயல். ௫௧௭
பொருட்குஞ் செயற்கும் பொருத்தமாப் பகுத்திடல். ௫௧௮
நிலவறை தான்செய னிதிமிகின் மேற்செயல். ௫௧௯
நற்றரு செடிகொடி யிற்புறத் தமைத்திடல். ௫௨௦

# இல்வாழ்வியல்.

## ௩௩-ம் அதி.—உயிர்த்துணை கோள்ளல்.

உயிர்த்துணை தன்னுயிர்க் குதவெதிர் பாற்றுணை. ௩௨௧
அத்துணைக் கெங்கணு மொத்ததென் றிலதே. ௩௨௨
ஆக்கமுங் கேடு மத்துணை யாலாம். ௩௨௩
கொள்ளு மறிவெலாங் கொண்டுபின் றுணைகொளல் ௩௨௪
கொளுமுன் கொண்டிடிற் குற்றம் பலவாம். ௩௨௫
துணையிழந் தாரை மணப்பது புண்ணியம். ௩௨௬
விரும்பா தவரை விருப்புதல் பாவம். ௩௨௭
துணைநலங் குடிமையே தூய்மையே யொழுக்கமே. ௩௨௮
பருவமே யெழிலே பண்பே யின்சொலே. ௩௨௯
வாவினுள் வாழ்தலே மடிதுயி லிலாமையே. ௩௩௦

## ௩௪-ம் அதி—உயிர்த்துணை யாளுதல்.

இருவரு ளறிவிற் பெரியவ ராள்க. ௩௩௧
ஆண்பா லுயர்வெனல் வீண்பேச் சென்க. ௩௩௨
துணைநன் காள்பவர் தொல்லுல காள்வர். ௩௩௩
தன்னுயி ருடல்பொரு டன்றுணைக் குரியன ௩௩௪
தன்றுணை யுயிர்முத றனக்காங் குரியன. ௩௩௫
இருவராத் தோன்றினு மொருவரே யுள்ளின். ௩௩௬
தானறிந் தவையெலாந் தன்றுணைக் குணர்த்துக. ௩௩௭
தனதுநன் னெறிதுணை சார்ந்திடச் செய்க. ௩௩௮
இயற்றுவ துணையுட னெண்ணி யியற்றுக. ௩௩௯
உண்பன துணையோ டுடனிருந் துண்ணுக. ௩௪௦

## ௩௫-ம் அதி.—இன்பந் துய்த்தல்.

துணையோ டின்பந் துய்த்தலே சுவர்க்கம். ௩௪௧
துய்க்கு முறையெலாந் தொல்லகப் பொருள்சொலும். ௩௪௨
முறையறி யாதுறல் குறையறி வுயிர்செயல். ௩௪௩
தன்றுணைக் கின்பந் தரத்தரத் தனக்கதாம். ௩௪௪
தானின் புறவெணிற் றனக்கதெய் தாதே. ௩௪௫
ஊட லுணர்தல் புணர்த லதன்வகை. ௩௪௬
ஊட னிமித்த முடனுட னுக்குக. ௩௪௭
இரந்தும் புணர்ந்து முணர்ந்திடச் செய்க. ௩௪௮
இருந்திரங் கத்துணை பிரிந்திடல் நீக்குக. ௩௪௯
துணையழத் துறந்துமெய் யிணைதலன் பிலாவறம். ௩௫0

## ௩௬-ம் அதி.—காமம் விலக்கல்.

காம மகத்தெழு மாமத வெறியே. ௩௫௧
இன்ப மறிவோ டிருந்தநு பவிப்பதே. ௩௫௨
இராச்சில குறித்தலை யியைந்திட லின்பம். ௩௫௩
எண்ணிய பொழுதிடத் தியைந்திடல் காமம். ௩௫௪
காம மகப்புறக் கண்களைக் கெடுத்திடும். ௩௫௫
காம பெருங்காற் கடவுளை யுள்ளுக. ௩௫௬
அறிவெனுந் தோட்டியா னதனைக் காக்க. ௩௫௭
அதைவளர்ப் பவைதமை யகத்தைவிட் டோட்டுக. ௩௫௮
அதையடு மொன்றை யகத்தினுட் கொள்ளுக. ௩௫௯
அதைநன் குள்ளி மதவெறி களைக. ௩௬0

## இல்வாழ்வியல்.

### ௩௭-ம் அதி.—பரத்தையை விலக்கல்.

பரத்தை யின்பினைப் பலர்க்கும் விற்பவள். ௩௬௧
மதுரு திரண்டினும் பொதுமகள் கொடியள். ௩௬௨
அவனுடை யுடைநோக் காதியா லழிப்பள். ௩௬௩
இன்பந் தருதல்போற் றுன்பெலாந் தருவள். ௩௬௪
உடைமுதற் பொருளெலா முயிரொடு கவர்வள். ௩௬௫
அவளினும் வஞ்சக ரவனியி லில்லை. ௩௬௬
அவளினுங் கள்வ ருளின ரெனலாம். ௩௬௭
அவளுள நினைந்தாற் றவசியுங் கெடுவன். ௩௬௮
அவளா லந்தோ வழிந்தவ ரநேகர். ௩௬௯
அவளிலா நாடே யழிவுறு நாடு. ௩௭௦

### ௩௮-ம் அதி. பரத்தனை விலக்கல்.

தன்றுணை யலாளைத் தழுவுவோன் பரத்தன். ௩௭௧
பரத்தை யினுமிகக் கொடியவன் பரத்தன். ௩௭௨
பொதுமக ளாதலம் முழுமக னாலே. ௩௭௩
நன்மகன் கெடுதலப் புன்மக னாலே. ௩௭௪
மறனெலா நிகழ்வதம் மாபாவி யாலே. ௩௭௫
அவனைக் காண்டலா லழியும் புகழே. ௩௭௬
அவனோடு பேசலா லழியு நிறையே. ௩௭௭
அவனொடு சேர்தலா லழியு மனைத்தும். ௩௭௮
அவனிலா நாடே யாகுநன் னாடு. ௩௭௯
அறனு மளியு மமைவுறு நாடு. ௩௮௦

# மெய்யறம்

## ௩௯-ம் அதி.—சிற்றினம் விலக்கல்.

சிற்றினங் குணத்திற் குற்றமிகு மாக்கள். ௩௮௧
பெருமிதந் தன்னைப் பேணு மாக்கள். ௩௮௨
அற்பத் தன்மை யளாவிய மாக்கள். ௩௮௩
பொறியின் பங்களிற் செறிவுறு மாக்கள். ௩௮௪
சுயநயங் கருதும் பயனிலா மாக்கள். ௩௮௫
சிற்றினம் பொருளையுஞ் சீரையு மழிக்கும். ௩௮௬
அற்றமுங் குற்றமு முற்றிடச் செய்யும். ௩௮௭
முற்றவ நலத்தொடு கற்றவுஞ் சிதைக்கும். ௩௮௮
நரகும் பழியு நண்ணிடச் செய்யும். ௩௮௯
சிற்றினப் பற்றினைச் சிறிதும் வேண்டேல். ௩௯0

## ௪0ம். அதி.—பெரியாரைத் துணைக்கோளல்.

பெரியா ரரியன பெரியன செய்பவர். ௩௯௧
பொறியா ளுளத்தை யறிவா லாள்பவர். ௩௯௨
இகபர வியலெலா மெண்ணிநன் கறிந்தவர். ௩௯௩
நல்லின வியலெலா நண்ணி நிற்பவர். ௩௯௪
பின்னுறுந் தீங்கெலா முன்னறிந் தொழிப்பவர். ௩௯௫
அவரது துணைகொள லரும்பெருங் காப்பு. ௩௯௬
அவரை யறிந்துகொண் டநுதின மோம்புக. ௩௯௭
அவர்க்குரி யனவெலா மன்பொடு வழங்குக. ௩௯௮
அவரோ டெண்ணியே யனைத்துஞ் செய்க. ௩௯௯
அவருரை பிழையா தியாங்கணு மொழுகுக. ௪00

# இல்வாழ்வியல்.

## ௪௧-ம் அதி.—பேதைமை யொழித்தல்.

பேதைமை யேதங்கொண் டூதியம் விடுதல். ௪௦௧
கடிந்தவை தம்பால் காதன்மை செய்தல். ௪௦௨
நாணன் பருள்புகழ் பேணுத லின்மை, ௪௦௩
அறிந்துணர்ந் துரைத்து மடங்கா தொழுகல். ௪௦௪
அறத்தை விடுத்து மறத்தைப் புரிதல். ௪௦௫
வினைசெயின் பொய்படும் புனைகொளும் பேதை. ௪௦௬
தமர்பசித் துழலப் பிறர்க்கிடும் பேதை. ௪௦௭
பேதையோர் காசுறிற் யித்தன் களித்தற்று. ௪௦௮
அவைபுகிற் பேதை யதனலங் குன்றும். ௪௦௯
பெரியார் நூல்கொடு பேதைமை களைக. ௪௧௦

## ௪௨-ம் அதி—வெண்மை யொழித்தல்.

வெண்மை யறிவினை விடுத்த தன்மை. ௪௧௧
ஒண்மை யுடையமென் றுளத்தொடு செருக்கல். ௪௧௨
ஈயவேண் டியவிடத் தீயா திவறல். ௪௧௩
குற்றம் பலவுஞ் சுற்றமாக் கொள்ளல். ௪௧௪
கற்றில கற்றவாக் காட்டி நடித்தல். ௪௧௫
அருமறை விடுத்துப் பெருமிறை கொள்ளல். ௪௧௬
செய்வன சொல்லியுஞ் செய்யா திழுக்கல். ௪௧௭
உலகின ருளதென்ப திலதென மறுத்தல். ௪௧௮
இன்மையு ளின்மை வெண்மை யொன்றே. ௪௧௯
ஒண்மைசா னூல்கொடு வெண்மையைக் களைக. ௪௨௦

# மெய்யறம்

## சந-ம் அதி.—நெடுநீ ரொழித்தல்.

நெடுநீர் கால நீள விடுதல். சஉக
ஒருகணச் செயலைமற் றொன்றற் கீதல். சஉஉ
நெடுநீர் குறைபல தருமியல் புடையது. சஉந
நெடுநீர் சிறிதுறி னடுமதூஉம் பெருகி. சஉச
நெடுநீ ரறவிடிற் படுபொரு ளாகும். சஉரு
நெடுநீர் விடற்கந் நினைவையுட் கொள்ளுக. சஉசு
நெடுநீ ரால்வருங் கெடுதியை யுள்ளுக. சஉஎ
எக்கணத் தெஃதுறு மக்கணத் ததைச்செயல். சஉஅ
உறுவது பெரிதென வுற்றதை வைத்திடேல் சஉகூ
உற்றதைச் செய்துபி னுறுவதை யெண்ணுக. சந0

## சச-ம் அதி.—மறவி யொழித்தல்.

மறவிதன் கடமையை மனத்திலுன் னாமை. சநக
மறவியூக் கத்தின் மறுதலை யாகும். சநஉ
மறவி பலவகை யிறவையு நல்கும். சநந
மறவியை யடுத்தவர் மாண்பெலா மிழப்பர். சநச
மறவியை விடுத்தவர் மாநிலத் துயர்வர். சநரு
மறவியை விடற்கு மனத்தினன் குள்ளுக சநசு
காலையு மாலையுங் கடவுளைத் தொழுக. சநஎ
மாணுயர் நூல்சில மனனஞ் செய்க. சநஅ
விடிந்தபின் செய்பவை விடியுமு னுள்ளுக. சநகூ
பகலிற் செய்தவை யிரவினன் காய்க. சச0

# இல்வாழ்வியல்.

## ௪௫-ம் அதி.—மடி யொழித்தல்.

மடிதஞ் செயல்களின் மந்த முறுதல். ௪௪௧
மடிமெய்ம் முயற்சியின் மறுதலை யாகும். ௪௪௨
மடிதமை யொன்றார்க் கடிமைப் படுத்தும். ௪௪௩
மடியினை யுடையவர் குடியொடு கெடுவர். ௪௪௪
மடியினை விடுத்தவர் படியெலாங் கொள்வர். ௪௪௫
மடியினை விடற்கு மனத்தினன் குள்ளுக. ௪௪௬
காலைமெய்ப் பயிற்சி சோலைநீர்க் குளிகொளல். ௪௪௭
இளம்பக லுணவரை யிராவுண வரைகொளல். ௪௪௮
இரவினல் யாமத் தெல்லா முறங்குக. ௪௪௯
பயனுள சிலசொற் பார்த்துப் பேசுக. ௪௫௦

## ௪௬-ம் அதி.—துயி லொழித்தல்.

உடம்புள வயர்வினை யொழிப்ப துறக்கம். ௪௫௧
அவ்வயர் வளவிற் கதிகமா வது துயில். ௪௫௨
சுழுத்தியா முறக்கஞ் சுகத்தை வளர்க்கும். ௪௫௩
கனவுக ளாந்துயில் கவலையை வளர்க்கும். ௪௫௪
துயில்கொள வழிவாந் துயில்விட வாக்கமாம். ௪௫௫
அயர்விற் கமையு மைம்மூன் று நாழிகை. ௪௫௬
மற்றைய பொழுதெலா மாண்டொழில் புரிக. ௪௫௭
தொழில்செயும் பொழுது துயில்வரி னுலாவுக. ௪௫௮
கைத்தொழின் முதலிய மெய்த்தொழில் செய்க. ௪௫௯
அவசிய மெனினுண வரையினுஞ் சுருக்குக. ௪௬௦

# மெய்யறம்

## ௪௭-ம் அதி.—செருக் கொழித்தல்.

செருக்கென் பதுதன் பெருக்கத் தகங்கொளல். ௪௬௧
அஃதறி யாமையி னங்குர மென்ப. ௪௬௨
ஆன்ம வுயர்வினை யழிப்பதச் செருக்கு. ௪௬௩
அடங்கா வுளத்தை யளிப்பதச் செருக்கு. ௪௬௪
அழியு முடம்பை யளிப்பது மஃதே. ௪௬௫
செருக்கினர் தம்மெய்த் திறத்தினைக் காணார். ௪௬௬
தம்பகைத் திறத்தைத் தாழ்த்தியே யெண்ணுவர் ௪௬௭
இன்பினு மடியினு மிறந்து படுவர். ௪௬௮
துயிலு மறவியுந் தொடர்ந்து கொள்வர். ௪௬௯
புகழெலாம் போக்கி யிகழெலா மீட்டுவர். ௪௭0

## ௪௮-ம் அதி.—அச்ச மொழித்தல்.

அச்ச மனமுட லழிவுற நடுங்கல். ௪௭௧
அஃதறி யாமையி னந்தமென் றுணர்க. ௪௭௨
அறம்புகழ் செய்தலா லழியினும் வாழ்வாம். ௪௭௩
மறம்பழி செய்தலால் வாழினு மழிவாம். ௪௭௪
அறம்புகழ் செய்வதற் கஞ்சுதன் மறனே. ௪௭௫
மறம்பழிக் கஞ்சுதன் மாண்புடை யறனே. ௪௭௬
அறநெறி மறந்தரின் மறநெறி யாகும். ௪௭௭
மறநெறி யறந்தரி னறநெறி யாகும். ௪௭௮
அச்ச முடையார்க் கெச்சமிங் கில்லை. ௪௭௯
அச்ச மிலார்க்கு நிச்சலு மெச்சமாம். ௪௮0

# இல்வாழ்வியல்.

## ௪௯-ம் அதி.—இடுக்க ணழியாமை.

இடுக்கண் டுயரினைக் கொடுக்குமிடை யூறு. ௪௮௧
இடுக்க ணுற்றுழி நகினது தான்கெடும். ௪௮௨
இடுக்க ணுக்குள நெகினது பெருகும். ௪௮௩
இடுக்கண் புறத்துள தென்பது பொய்ம்மை. ௪௮௪
இடுக்க ணகத்துள தென்பது மெய்ம்மை. ௪௮௫
இடுக்க ணகத்ததென் றெண்ணலஃ தழியும். ௪௮௬
இடுக்கணி லழியா ரிடுக்க ணழியும். ௪௮௭
இடுக்கண் வலியினைக் கொடுக்குந் திறத்தது. ௪௮௮
இடுக்க ணறிவினை யீயு மியலது. ௪௮௯
இடுக்கணிற் றளரா ரெண்ணிய முடிப்பர். ௪௯0

## ௫௰-ம் அதி.—பற்றுளம் விடுதல்.

பற்றுளம் பொருளினிற் பற்றுள நெஞ்சம். ௪௯௧
ஈயா துண்ணு தெண்ணிவைத் திவறல் ௪௯௨
பற்றுள மரில்பல வற்றுளும் பெரிது. ௪௯௩
பற்றுளம் பல்வகைக் குற்றமு நல்கும். ௪௯௪
பற்றுளத் தாலருஞ் சுற்றமு நீங்கும். ௪௯௫
பற்றுளத் தார்பொருண் முற்று மிழப்பர். ௪௯௬
அறம்புக ழின்பமெய் யறிவுவீ டிழப்பர். ௪௯௭
பற்றுளம் விடுத்தவர் பாரெலாங் கொள்வர். ௪௯௮
அறம்புக ழின்பமெய் யறிவுவீ டடைவர். ௪௯௯
பற்றுளப் பேயினைச் செற்றுடன் றுரத்துக. ௫00

# மெய்யறம்

## ௫௧-ம் அதி.—தன்னைப் பேணல்.

தன்னைப் பேணுத றன்முதற் கடமை. ௫௦௧
தன்னைப் பேணார் தாழ்வே யடைவர். ௫௦௨
தன்னைப் பேணுவோர் தலைமை யெய்துவர். ௫௦௩
பேணல் பெருமை யெலாமுற முயறல். ௫௦௪
உடல்பொருள் வினைபொழு திடனறிந் தின்புறல். ௫௦௫
பொருளு மொழுக்கமும் புகழும் பெருக்கல். ௫௦௬
உடம்போர் யானையி னாமுற வளர்த்தல். ௫௦௭
மனமுயர்ந் தவையெலாந் தினமுணப் பயிற்றல். ௫௦௮
அறிவின் மலனொழித் தழுக்குறா தமைதல். ௫௦௯
தன்னுயிர்த் துணையைத் தனைப்போ லாக்கல். ௫௧௦

## ௫௨-ம் அதி.—உற்றாரைப் பேணல்.

உற்றார் பெற்றா ருறவினர் பலருமே. ௫௧௧
தன்னுற வினமெலாந் தன்றுணைக் கன்னர். ௫௧௨
தன்றுணை யுறவினர் தனக்காங் கன்னர். ௫௧௩
தாயுந் தந்தையுந் தான்றொழுந் தகையர். ௫௧௪
அவரைப் பேணுத லரும்பெருங் கடனே. ௫௧௫
சோதர ருற்றுழி யாதர வாவர். ௫௧௬
அவரைப் பேணுத லாக்கம் பேணலே. ௫௧௭
மற்றுளா ருந்தமைச் சுற்றுறப் பேணுக. ௫௧௮
உற்றவர்ப் பேணிற் பற்றல ரொழிவர். ௫௧௯
உற்றார் பெருகி னாமிகப் பெருகும். ௫௨௦

# இல்வாழ்வியல்.

## ருகூ-ம் அதி.—விருந்தினரைப்பேணல்.

விருந்தினர் முன்னர்த் தெரிந்திலாப் புதியர். ருஉக
விருந்தினர்ப் பேணுவார் பெருந்தகை யோரே. ருஉஉ
விருந்தின ருண்ணலம் பொருந்தினர்க் கொள்க. ருஉங
விருந்தினர்க் குணவுநன் மருந்தென வழங்குக. ருஉச
உடையிடம் படுக்கை குடைகாப் புதவுக. ருஉரு
உளமறிந் தேனைய வளவறிந் தீக. ருஉசு
இன்ப மவருற வின்சொல் வழங்குக. ருஉஎ
அவரறிந் தவையெலா மறிந்துளங் கொள்க. ருஉஅ
அவருய ரொழுக்கெலா மறிந்துகைக் கொள்க. ருஉகூ
செல்வுழி யுடன்சென் றுள்ளிடப் பிரிக. ருங௦

## ருச-ம் அதி.—முன்னோரைப் பேணல்.

முன்னோர் துஞ்சிய தன்னுற வினரே. ருஙக
அவரைப் பேணலா லாம்பல நலமே. ருஙஉ
அவரைப் பேணுமா றடிக்கடி யுள்ளல். ருஙங
அவர்தொடங் கியவறந் தவறுறு தாற்றல். ருஙச
அவர்செய வெண்ணிய வறங்களு மியற்றல். ருஙரு
அவர்நற் குணனெலா மறிந்துகைக் கொள்ளல். ருஙசு
அவர்நற் செயலெலா மழியாது நிறுத்தல். ருஙஎ
அவர்நற் பெயர்தம தருமகார்க் களித்தல். ருஙஅ
அவர்பெயர் விளங்கிட வறம்பல புரிதல். ருஙகூ
அவர்க்குறும் பிறவு மன்பொடு செய்தல். ருச௦

## ௫௫-ம் அதி.—புதல்வரைப் பேணல்.

புதல்வரே தம்மரும் பொருளென மொழிப. ௫௪௧
நன்றுசெய் புதல்வரா னரகறு மென்ப. ௫௪௨
பொருளுங் குடியும் புகழுமா மவரால். ௫௪௩
துணைதரும் புதல்வர்க் கிணைபிற ராகார். ௫௪௪
பிறரைப் புதல்வராப் பெறுதலும் வழக்கே. ௫௪௫
மிகமிக வருந்தியும் புதல்வரை வளர்க்க. ௫௪௬
இளமையி னவர்நல் வினைமுறச் செய்க. ௫௪௭
தக்கவா சிரியரைச் சார்ந்திடச் செய்க. ௫௪௮
கல்வியு மொழுக்கமுங் கைக்கொளச் செய்க. ௫௪௯
இல்வாழ் வாசற வல்லுந ராக்குக. ௫௫௦

## ௫௬-ம் அதி.—அன்பு வளர்த்தல்.

அன்பெனப் படுவ தகத்தி னுருக்கம். ௫௫௧
ஆர்வல ருறறி னாகண் ணீராம். ௫௫௨
அவரூ றொழிக்குந் தவலிலா முயற்சியாம். ௫௫௩
ஆருயிர் பெற்றதிங் கன்புசெய் தற்கே. ௫௫௪
அன்புபா ராட்டற் காமிடந் தானே. ௫௫௫
தன்னுயிர்த் துணையே தன்னரும் புதல்வரே. ௫௫௬
தன்பெற் றோரே தன்சகோ தரரே. ௫௫௭
தன்னா சிரியரே தன்னுற வினரே. ௫௫௮
தன்னூ ராரே தன்னாட் டினரே. ௫௫௯
மனிதர் சமூகமே மன்னுயி ரனைத்துமே. ௫௬௦

## இல்வாழ்வியல்.

### ௫௭-ம் அதி.—பொறுமை கோள்ளல்.

பொறுமை பிறர்மிகை பொறுக்கு நற்குணம். ௫௬௧
தன்னலங் கெடுங்காற் சகிப்பது பொறுமை. ௫௬௨
பொதுநலங் கெடுங்காற் பொறுப்பது பிழையே ௫௬௩
வறுமைப் பிணிக்குப் பொறுமைநன் மருந்தாம். ௫௬௪
சிறுமையை வளர்ப்பது பொறுமையில் லாமை. ௫௬௫
பொறுமையைக் கொண்டவர் புவியெலாங் கொள்வர். ௫௬௬
பொறுமையை யிழந்தவர் புசிப்பவு மிழப்பர். ௫௬௭
ஒறுத்தார்க் கொருகணத் தொருசிறி தின்பமாம். ௫௬௮
பொறுத்தார்க் கென்றும் பொன்றா வின்பமாம். ௫௬௯
ஒறுத்தார் சிறியர் பொறுத்தார் பெரியர். ௫௭௦

### ௫௮-ம் அதி.—ஒப்புர வொழுகல்

ஒப்புர வூரா ரொப்பு நன்னடை. ௫௭௧
ஒப்புர வுயர்தர வொழுக்கத் தின்முதல். ௫௭௨
ஒப்புர வொழுகுவார்க் குறவினர் பெருகுவர். ௫௭௩
ஒப்புர விலானை யொருவருந் தழுவார் ௫௭௪
அறிஞரி னொப்புர வறவோர்க் குதவல். ௫௭௫
துறந்தா ரிறந்தார் துவ்வார்க் குதவல். ௫௭௬
ஊர்ப்பொது நன்மைக் குழைத்தெலாஞ் செய்தல். ௫௭௭
ஊரார் நன்மை தீமைக் குதவல். ௫௭௮
ஊரார் வேண்டுவ வுவந்துட னளித்தல். ௫௭௯
ஊரா ராணைக் குட்பட் டொழுகல். ௫௮௦

# மெய்யறம்

## ௫௯-ம் அதி.—ஈகை புரிதல்.

இல்லார்க் கீவதே யீகை யென்ப. ௫௮௧
மற்றையோர்க் கீதன் மாற்றிலா மடமை. ௫௮௨
இல்லா ருள்ளு நல்லார்க் கீக. ௫௮௩
பிறருக் கீதல் பிழையென வறிக. ௫௮௪
மடையரே மடியரே பிணியரே யில்லார். ௫௮௫
மடையர்க் கீக மதியெனு மொன்றே. ௫௮௬
மடியர்க் கீக தொழிலெனு மொன்றே. ௫௮௭
மற்றையோர்க் கீக மருந்தூ ணிடனே. ௫௮௮
உடையவ ரீதற் குரிய ராவர். ௫௮௯
ஈகை புகழ்சிறப் பெல்லா நல்கும்: ௫௯௦

## ௬௦-ம் அதி.—புகழ் செய்தல்.

புகழுப ருலகம் புகலு நன்மொழி. ௫௯௧
புகழ்செய் தவரே பொன்றாது நிற்பவர். ௫௯௨
அறமுத னான்கு மாற்றிமெய் யடைந்தவர். ௫௯௩
புகழ்செய் யாரே பொன்றி யொழிந்தவர். ௫௯௪
நான்கி லொன்றையு நண்ணா திழிந்தவர். ௫௯௫
மெய்ப்புகழ் தருவன மெய்யிய லடைதல். ௫௯௬
உலக முழுவது மொருங்கர சாளுதல். ௫௯௭
அறமுத னான்கு மறிந்துசெய் துரைத்தல். ௫௯௮
உற்றவர்க் கெல்லா முடனுவந் துதவல் ௫௯௯
இல்லார்க் கெல்லா மீந்து வாழ்தல். ௬௦௦

# அரசியல்.

## ௬௧-ம் அதி.—அரசு நலம்.

அரசுயிர் கட்குச் சிரசென நிற்பது. ௬௦௧
அதனலன் மாணவ ரருநல னுறுதல். ௬௦௨
இல்வாழ் வியலெலா மியைந்துநன் கொழுகல். ௬௦௩
சுற்றம் பெருக்கல் சூழ்ச்சி புரிதல். ௬௦௪
தெரிந்து தெளிதல் செய்வினை யாளுதல். ௬௦௫
ஒற்றுரை நூலமைச் சொருங்குட னுறுதல். ௬௦௬
பெரியமன் னரைச்சார்ந் தரியவை பெறுதல். ௬௦௭
நாடரண் பொருள்படை நட்பினி தாளுதல். ௬௦௮
வினைத்திற னினைத்து நினைத்தறிந் தாற்றல். ௬௦௯
முறைசெய் தறப்புரிந் திறையென நிற்றல். ௬௧௦

## ௬௨-ம் அதி.—சுற்றல் பெருக்கல்.

சுற்றமென் பதுதனைச் சூழ விருப்பது. ௬௧௧
சுற்றமு மறிவுபோ லற்றங் காக்கும். ௬௧௨
சுற்ற மின்மை யற்றமுறு விக்கும். ௬௧௩
சுற்ற முடையார் சூழ்வன முடிப்பர். ௬௧௪
சுற்ற மிலார்க்குச் சூழ்ச்சியே யில்லை. ௬௧௫
குற்றம் விடுதலாற் சுற்றுறுஞ் சுற்றம். ௬௧௬
கொடையா லின்சொலாற் கூடிடுஞ் சுற்றம். ௬௧௭
வாய்மையாற் பொறுமையாற் றூய்மையாஞ் சுற்றம். ௬௧௮
கொள்ளல் கொடுத்தலாற் குலாவுறுஞ் சுற்றம். ௬௧௯
உணர்ச்சி பழகலா லுதவுஞ் சுற்றம். ௬௨௦

# மெய்யறம்

## ௬௩-ம் அதி.—கண்ணோட்டம்.

கண்ணோட்டஞ் சுற்றமேற் கண்ணோடி வீழ்தல். ௬௨௧
சுற்றங் கண்டுழிக் குற்ற மறத்தல். ௬௨௨
சுற்றங் கண்டுழி யுற்றன செய்தல். ௬௨௩
கண்ணிற் கழகு கண்ணோட்ட மென்ப. ௬௨௪
உளத்தொடு சேர்ந்தகண் ணோட்ட முயர்ந்தது. ௬௨௫
தீவினை யாளர்பாற் றீதுகண் ணோட்டம். ௬௨௬
கண்டுநஞ் சுணல்கரை கடந்தகண் ணோட்டம். ௬௨௭
கருமங் கெடாவகை கண்ணோடல் தக்கது. ௬௨௮
சிறுவர்பா லென்றுஞ் சிறிதுகண் ணோடுக. ௬௨௯
முறைசெயும் பொழுததை முற்றுமே விடுக. ௬௩௦

## ௬௪-ம் அதி.—சூழ்ச்சி புரிதல்.

இயற்றுவ தெல்லா மெண்ணியே யியற்றுக. ௬௩௧
எண்ணா தியற்றுதல் கண்ணிலார் நடையாம். ௬௩௨
இயற்றத் தொடங்கி யெண்ணுத லிழுக்காம். ௬௩௩
இயற்றுமுன் செயலி னியல்பினை யாய்க. ௬௩௪
அறமெனிற் சுற்றுறு மறிஞரோ டெண்ணுக. ௬௩௫
வரவு செலவு வரும்பய னெண்ணுக. ௬௩௬
செய்வலி செய்வழி செய்பவர்க் கருதுக. ௬௩௭
வரவிற் செலவு வளருமேல் விடுக. ௬௩௮
பெரும்பயன் றராதெனிற் பேணா தொழிக. ௬௩௯
செய்வலி நெறியாள் சீரின் றேல்விடல். ௬௪௦

# அரசியல்.

## ௬௫-ம் அதி.—தெரிந்து தெளிதல்.

செயல்செய் வாரிய வுயர்குடிப் பிறப்பே. ௬௪௧
செம்மையே வாய்மையே தீவினை யின்மையே. ௬௪௨
அறிவே யன்பே யழகே யாற்றலே. ௬௪௩
பண்பே பொறையே பணிவே யின்சொலே. ௬௪௪
மறவி நெடுநீர் மடிதுயி லிலாமையே. ௬௪௫
அவாஅ வின்மையே தவாவினை யுண்மையே. ௬௪௬
பொதுச்சிறப் பெனுமிரு மதிவளர் கல்வியே. ௬௪௭
இவையெலா மியைந்துள வினமெலாந் தெரிக. ௬௪௮
அறம்பொரு ளின்புயி ரச்சத்தாற் றெளிக ௬௪௯
தெளியுமுன் கொண்டிடேல் தெளிந்தபி னையுறேல். ௬௫0

## ௬௬-ம் அதி.—செய்வினை யாளுதல்

நன்றுதீ தெண்ணி நலம்புரிவா னாள்க. ௬௫௧
வருவாய் பெருக்கி வளனுசெய்வா னாள்க. ௬௫௨
ஊறுற்ற தாற்று முணர்வோனை யாள்க. ௬௫௩
உறுமூ றொழிக்கு முரவோனை யாள்க. ௬௫௪
வினையினிற் றிரியா மெய்பனை யாள்க. ௬௫௫
இதையிதான் முருப்பனென் றதையவன் பால்விடல். ௬௫௬
அதன்பி னவனையே யதற்குரிய னாக்குக. ௬௫௭
வினைக்கண் வினைசெயும் வீரனை யையுறேல். ௬௫௮
செயல்செயும் பலரையுந் தினந்தொறு நாடுக. ௬௫௯
செயன்முறை செய்தவன் சிந்தைகண் டாற்றல் ௬௬0

# மெய்யறம்

## ௬௭-ம் அதி.—ஒற் றாளுதல்.

ஒற்றுவினை ஞர்பகை சுற்றமறைந் தறிவது. ௬௬௧
கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தறிவது. ௬௬௨
உறுப்பெலாஞ் சிதைப்பினு முகாஅமை வல்லது. ௬௬௩
உலகெலா நிகழ்பவை யொற்றினா லறிக. ௬௬௪
ஒற்றுரை சான்றநூல் கொற்றவன் கண்களே. ௬௬௫
ஒற்றிலார் கொற்றமும் வெற்றியு மிழப்பர். ௬௬௬
ஒற்றுரைத் ததனைவே றொற்றினா லொற்றுக. ௬௬௭
ஒற்றுமூன் றொத்திடி னுண்மையென் றறிக. ௬௬௮
ஒற்றொற் றயிரா துணரா தாள்க. ௬௬௯
ஒற்றில் கயலா ருணர்ந்திடா தீக. ௬௭௦

## ௬௮-ம் அதி —உரைநூ லாளுதல்.

உரைநூல் புரைதவிர் புகழ்சால் நூல்கள். ௭௧௧
அழியாப் பொருள்களை யறைபவே புகழ்பெறும். ௬௭௨
அவைமெய்ப் பொருளே யதிற்சே ரறனே. ௬௭௩
பொருளிலா தறனிலை புணர்விலா தொழிவிலை. ௬௭௪
ஆதலா லவையு மழியாய்ப் பொருள்களே. ௬௭௫
அவ்வைம் பொருளினு மடங்காப் பொருளில்லை. ௬௭௬
புதுநூ லுடனே புகழ்பெற லரிது. ௬௭௭
ஆதலா லுரைநூ லவைசொலுந் தொன்னூல். ௬௭௮
அவைபல மொழியினு மமைந்துள மறைகள். ௬௭௯
இனியநந் தமிழி னிலக்கிய மிலக்கணம். ௬௮௦

# அரசியல்.

## ௬௯-ம் அதி.— அமைச் சாளுதல்.

அமைச்சர சிறக்கினி தமைவன சொல்வது. ௬௮௧
அரசுசொல் வனவு மமைத்துத் தருவது. ௬௮௨
அரசின் செயற்கெலாஞ் சிரசென நிற்பது. ௬௮௩
அரசின் குடிக்கெலா மன்னையா நிற்பது. ௬௮௪
அரசுயிர்த் துணையா வறனெலாஞ் செய்வது. ௬௮௫
அதனல மரசிய லினைத்துநன் காளுதல். ௬௮௬
நூலிய லுலகிய லுண்ணறி வுடைமை. ௬௮௭
காமமும வெகுளியுங் கைக்கொளா தமைதல். ௬௮௮
அமைச்சுபட் டிமைப்போ லமைந்தறம் புரிக. ௬௮௯
அரசுவிக கிரயனி னன்புகொண் டாள்க. ௬௯௦

## ௭௦-ம் அதி.—அறிந்து சொல்லல்.

நாநல மழிபா நலமென மொழிப. ௬௯௧
ஆக்கமுங் கேடு மதின்வரு மென்ப. ௬௯௨
அறனும் பொருளு மதின்வரு மன்ற. ௬௯௩
அகிலநிற் பதுமஃ தலமைதலா னன்றே. ௬௯௪
சொல்லு மியாவெலா மொல்லும் வகைசொலல். ௬௯௫
அவையறம் பொருட்ட வமைத்துச் சொல்லல். ௬௯௬
கேட்போர்க் கின்பங் கிளைக்கச் சொல்லல். ௬௯௭
சுருங்கத் தொகுத்து விளங்கச் சொல்லல். ௬௯௮
வரிசைப் படுத்தி மனங்கொளச் சொல்லல். ௬௯௯
மறுக்கா விதத்து மாணுறச் சொல்லல். ௭௦௦

## மெய்யறம்

### எக-ம் அதி.—பண்பு செய்தல்.

பாடறிந் தொழுகலே பண்பென மொழிப. எ0க
பண்பா லுலக முண்டெனும் பொதுமறை. எ0உ
மக்களுட் பண்பிலார் மரமெனப் படுவர். எ0ங
பெரியார்க் கடங்கி யுரியவை வழங்குக. எ0ச
சிறியரை யடக்கிச் செய்வன செய்க. எ0ரு
மெல்லியன் மகளிருண் மென்மைபா ராட்டுக. எ0சு
நண்பருள் ளுவப்புற நண்ணிநின் றொழுகுக. எ0எ
பகைவருள் ளுட்கமே னகைபுரிந் தொழுகுக. எ0அ
சலவருட் சாலச் சலஞ்செய் தொழுகுக. எ0கூ
பண்பா னின்பெலா மெண்பதத் தாலாம். எக0

### எஉ-ம் அதி.—பெரிய வரசரைச் சேர்தல்.

பெரிய வரசர் பெரியநா டாள்பவர். எகக
சிறிய வரசர்பாற் றிறைநனி கொள்பவர். எகஉ
எவ்வர சர்க்கு மிளையாத் திறத்தினர். எகங
திறனெலாம் பெருக்கி யறனெலாஞ் செய்பவர். எகச
மறஞ்செயு மரசரின் றிறஞ்சிதைத் தொழிப்பவர். எகரு
பெரிய வரசர் பெரியார்க் கடுத்தவர். எகசு
அவரைச் சேர்தலா லரும்பெரு மாக்கமாம் எகஎ
அமைச்சராய்ப் புலவரா யவரவை சேர்க. எகஅ
அருவினைத் தலைவரா யவர்பாற் சேர்க. எககூ
அவருளங் கொளநடந் தரியவை பெறுக. எஉ0

## எ௩-ம் அதி.—அவர்பா லொழுகல்.

அகலா தணுகா தனற்காய்வார் போல்க. எ௨௧
அன்பொடு மெய்யொடு மடங்கிநின் றொழுகுக. எ௨௨
அவர்முன் செவிச்சொ லயனகை பொருந்தேல். எ௨௩
அவர்சொலி னலாலொன் றறிந்திட விரும்பேல். எ௨௪
அவர்க்கா வனவு மையையங்கண் டியம்புக. எ௨௫
அவர்விழை பவற்றை யகத்தினும் விழையேல். எ௨௬
அவரை யுறுவகை யாங்கணு மொழுகுக. எ௨எ
இளைய ரினத்தின ரெனநினைந் திகழேல். எ௨அ
பழையவ ரெனினும் பண்பிலா தனசெய்யேல். எ௨௯
தனக்குவேண் டுவவவர் சாற்றெனிற் சாற்றுக. எ௩௦

## எ௪-ம் அதி.—குறிப்புணர் வுடைமை.

குறிப்புணர் விரண்டு கூறு கும்மே. எ௩௧
குறிப்பி னுணர்த்தலே குறிப்பி னுணர்தலே. எ௩௨
குறிப்பி னுணர்த்தல் கூறு துணர்த்தல். எ௩௩
குறிப்பி னுணர்தல் கூறு துணர்தல். எ௩௪
இவையர சமைச்சிற் கின்றியமை யாதவை. எ௩௫
அகத்தினி லுள்ளது முகத்தினிற் றெரியும். எ௩௬
மொழியான் மறைப்பினு முகமதைக் காட்டும். எ௩எ
முதுவர் குறிப்பினுன் மொழிகுவ ரறிகுவர். எ௩அ
முகங்கண் களினுன் மொழிகுவ ரறிகுவர். எ௩௯
முன்சொல் குறிப்பினு மொழிகுவ ரறிகுவர். எ௪௦



MADRAS LIBRARY MADRAS-1
80712

## எரு-ம் அதி.—அரியவை பெறுதல்.

அரியவை நட்புநா டரண்பொருள் படையே. எசக
அவையொருங் கெய்தின்வா யமிழ்தடைந் தற்றே. எசஉ
ஒன்றெய் தினும்பிற வுண்டா மெளிதே. எசங
ஒன்று மிலாது நன்றுற லரிது. எசச
அவைபெரு மன்னர்க் கரியன வல்ல. எசரு
அவருளங் கொளச்சொலி னவரவை யளிப்பர் எசசு
அவரையோர் தந்தையா வறிந்திட வுடன்படல், எசஎ
அவர்பின் வேண்டுவ வளித்திட வுடன்படல். எசஅ
அவரது பகையை யளித்திட வுடன்படல். எசகூ
பிறவுமொத் தியைவன பெற்றலாம் பெருக்குக. எருO

## எசு-ம் அதி.—நாடு.

நாடு நாடுவ நல்குநா னிலத்தது. எருக
மலைகாடு வயல்கடல் மருவிய நானிலம். எருஉ
அவை குறிஞ்சி முல்லை மருத நெய்தல். எருங
அவைபல வுயிருணு மாமுதற் றூங்கும். எருச
ஒருமொழி வழங்குவ தொருதனி நாடு. எருரு
ஒருபெருங் கண்டத் துறுவவக நாடு. எருசு
பிறபெருங் கண்டத் துறுவபுற நாடு. எருஎ
பெருங்கடன் மலையாற் பிரிவது கண்டம். எருஅ
கடலுந் தீவுமயற் கண்டமொடு சேரும். எருகூ
பலபெருங் கண்டமு முலகெனப் படுமே. எசுO

# அரசியல்.

## ௭௭-ம் அதி.—நாட்டுச் சிறப்பு.

நாட்டுச் சிறப்புநல் வளன்பல வமைதல். ௭௬௧
உயிர்களு முணுக்களு மொக்க நிறைதல். ௭௬௨
நிலநதி மலைகட னலநிதம் வளர்தல். ௭௬௩
அரும்பொருள் பெரும்பொரு ளாலய மிகுதல். ௭௬௪
அரணு மரசு மமைந்துநடு நிற்றல். ௭௬௫
உறுபசி யரும்பிணி செறுபகை யிலாமை. ௭௬௬
செல்வமு மின்பமுஞ் சீரும் பெருகல். ௭௬௭
ஒழுக்கமுங் கல்வியு முயர்நிலை நிற்றல். ௭௬௮
திறந்தகை வாய்மை யறந்தவம் வளர்தல். ௭௬௯
அருளுமெய் யறிவு மமைந்து பரவல். ௭௭௦

## ௭௮-ம் அதி.—அரண்.

அரணுயிர் பொருள்களை யளிக்குமோர் காப்பு. ௭௭௧
இயற்கையுஞ் செயற்கையு மியைந்தர ணாகும். ௭௭௨
அரண்புற வரணக வரணென விரண்டு. ௭௭௩
புறவரண் புறநா டுறுவகை காப்பது. ௭௭௪
அகவர ணரசுயி ரரும்பொருள் காப்பது. ௭௭௫
கண்டத்தைச் சூழ்ந்துள கடனீர் புறவரண். ௭௭௬
அதனை யடுத்துள வருநிலம் புறவரண். ௭௭௭
நிலத்தை யடுத்துள மலைத்தொடர் புறவரண். ௭௭௮
மலையை யடுத்துள மரக்காடு புறவரண். ௭௭௯
நாட்டகத் தமையுமிந் நான்கு மகவரண். ௭௮௦

# மெய்யறம்

## ௭௯-ம் அதி.—அரணமைத்தல்.

அரணிலார்க் கரசிலை யரசிலார்க் காணிலை. ௭௮௧
அரணன் கமைந்திடி னரசெலாங் கொள்ளும். ௭௮௨
அரணன் கமைந்தலோ ரரும்பெருஞ் செயலே. ௭௮௩
அரணெலா முரியரா லமைந்திடல் வேண்டும். ௭௮௪
புறவர ணனைத்தையும் பூரண மாக்குக. ௭௮௫
நாட்டி லகவர ணலம்பெற வியற்றுக. ௭௮௬
அவற்று ளகழ்மதி லரசில மாக்குக. ௭௮௭
புறவக நெறிகளைத் திறனுடன் பொருத்துக ௭௮௮
அவைகணத் தடைக்கவுந் திறக்கவும் வேண்டும். ௭௮௯
நெறியுள விடனெலாம் பொறிகளை நிரப்புக. ௭௯௦

## ௮௰-ம் அதி.—அரணளித்தல்.

அரண்படை யளிக்குமஃ தளிப்பது படையே. ௭௯௧
நீரி லரும்படை நெடுங்கல நிறுத்துக. ௭௯௨
நிலத்தி லருந்தொழில் வலப்படை நிரப்புக. ௭௯௩
மலைமதில் களிலரு வினைப்படை நாட்டுக. ௭௯௪
காட்டுட் பகைகொலுங் காவெலா மாக்குக. ௭௯௫
அரணுட் புறனெலா மாம்விளை வாக்குக. ௭௯௬
உடைபடைக் கலமெலாந் தடைவரா தியற்றுக. ௭௯௭
அவரவர் வசிப்புக் காமில மாக்குக. ௭௯௮
அகழ்மதில் சூழிலத் தரசினம் வாழ்க. ௭௯௯
அகவரண் களையர சறுதினங் காண்க. ௮௦௦

# அரசியல்.

## ௮௧-ம் அதி.—பொருள்.

விற்கத் தக்க விலையுடை யதுபொருள். ௮௦௧
பொருளின் பறம்புகழ் பொருந்திடச் செய்யும். ௮௦௨
பயனழ கருமையா லுயர்வஃ தடையும். ௮௦௩
விலையிடப் பொழுதால் வேறுபா டுற்றிடும். ௮௦௪
பொருண்மண் முதனாற் பூதங்கள் பிராணிகள். ௮௦௫
அவற்றினின் றாவன வாக்கப் படுவன. ௮௦௬
உத்தம மவற்றுண் முத்தாதி மணிகளே. ௮௦௭
வயிரமுதல் ரத்நமே பொன்முத லுலோகமே. ௮௦௮
நவதா னியமே நன்மாஞ் செடிகளே. ௮௦௯
உணவுடை யிலஞ்செல வணியமர்க் குரியவே. ௮௧௦

## ௮௨-ம் அதி.—பொருட் சிறப்பு.

பொருளிற் சிறந்தது புகலவொன் றில்லை. ௮௧௧
அதுநினைத் தவையெலா மளிக்குந் திறத்தது. ௮௧௨
சீர்சூ ழுலகெலா மோர்நொடி யிற்றரும். ௮௧௩
மன்னர்மன் னவரையுந் தன்னடி வீழ்த்தும். ௮௧௪
அருளையு மெய்யையு மடைந்திடச் செய்யும். ௮௧௫
பொருளிலா ரின்பறம் புகழ்மெய் யிழப்பர். ௮௧௬
மடையராய்த் தம்மரு நடையெலாம் விடுவர். ௮௧௭
அடியராய்ச் சிறியா யலக்கணுற் றுழல்வர். ௮௧௮
பசியினும் பிணியினும் பட்டுழந் தழிவர். ௮௧௯
பழியுளு நரகுளு மழியா துறைவர். ௮௨௦

# மெய்யறம்

## ௮௩-ம் அதி.—உழவு.

உழவு தொழினில விளையுளைச் செய்தல். ௮௨௧
உழவ ருயிர்க்கெலா முயிரெனத் தக்கவர். ௮௨௨
உழவுசெய் முறைநிலங் கிழவர்தாங் காண்டல். ௮௨௩
காடுநன் கழித்துக் கோடையி லுழுதல். ௮௨௪
நிலத்திற் கிசைவன விதைத்திடத் துணிதல். ௮௨௫
வித்திற் காமெரு மெத்த விடுதல். ௮௨௬
வேர்செலு மாழ மேர்செல வுழுதல், ௮௨௭
பதநன் கறிந்துநல் விதைசெல விதைத்தல். ௮௨௮
களைகட்டு நீர்பாய்ச்சிக் காத்துப் பயன்கொளல். ௮௨௯
ஒருபலன் றருநிலத் திருபல னாக்குதல். ௮௩௦

## ௮௪-ம் அதி.—வாணிகம்.

வாணிகம் பண்ட மாற்று நற்றொழில். ௮௩௧
ஃகிதஞ் ஞான்று மரசிற் கடுத்தது. ௮௩௨
அஃகிலார்க் கரசிலை யரசிலார்க் கஃகிலை. ௮௩௩
தன்முறை யதைநித மதிபர்தா நோக்கல். ௮௩௪
ணிதமெப் பொழுதுநா றுனிவைத் தாளுதல். ௮௩௫
ாள்ளிடங் கொடையிட முள்ளுணன் கறிதல். ௮௩௬
லவெலாங் கூட்டிச் சிறிதேற்றி விற்றல். ௮௩௭
ர்க்கு மொருசொலே யின்புறச் சொல்லல். ௮௩௮
னி கொடுக்கு மடனனி யொழித்தல். ௮௩௯
ரது பொருளையுந் தமதெனப் பேணல். ௮௪௦

# அரசியல்.

## ௪௫-ம் அதி.—கைத் தொழில்.

கைத்தொழில் பொருடரு மெய்த்தொழி லாகும். ௪௪௧
மற்றைய விரண்டையும் வளர்ப்ப தத்தொழில். ௪௪௨
அத்தொழில் பேணா ரடைகுவர் வறுமை. ௪௪௩
அத்தொழில் பல அவை யாடை நெய்தல். ௪௪௪
உணாற்குஞ் செயற்கு முதவுவ செய்தல். ௪௪௫
வீடரண் முதலிய மேம்பட வியற்றல். ௪௪௬
நிலத்திற் செல்பல வலத்தே ராக்கல். ௪௪௭
நீரிற் செல்பல நாவா யாக்கல். ௪௪௮
நிலநீ ருள்ளுள பலபொரு ளெடுத்தல். ௪௪௯
காப்பிற் காம்பல கருவிக ளியற்றல். ௪௫௦

## ௪௬-ம் அதி.—படை.

பகையுயிர் படுத்தலாற் படையெனப் பட்டது. ௪௫௧
உலகெலா மளிப்பதோ ருத்தம வரசே. ௪௫௨
அரசரண் பொருள்களை யளிப்பது படையே. ௪௫௩
இன்பமும் புகழு மீவது படையே. ௪௫௪
மெய்யிய லடையச் செய்வதும் படையே. ௪௫௫
படையிலா ரரசரண் படுபொரு ளிழப்பர். ௪௫௬
அறம்புக ழின்பறி வருண்மெய் யிழப்பர். ௪௫௭
அடியராய்ச் சிறைபுகுந் தலக்கணுற் றுழல்வர். ௪௫௮
பிணியொடும் பசியொடும் பிணக்குற் றழிவர். ௪௫௯
நரகமும் பழியுங் கிருகமாக் கொள்வர். ௪௬௦

## ௮௭-ம் அதி.—படை வகை.

படைவகை நான்கெனப் பகருவர், அவைதாம். ௮௬௧
முன்னோர் வழிவரு மூலப் படையே. ௮௬௨
நாட்டுளார் கூட்டு நாட்டுப் படையே. ௮௬௩
காட்டுளார்க் கூட்டுங் காட்டுப் படையே. ௮௬௪
கொடைநட் பால்வருங் கூலிப் படையே. ௮௬௫
நான்கிலொவ் வொன்று நால்வகைப் படும்அவை. ௮௬௬
நிலமிசை யமர்செயும் வலமிகு படையே. ௮௬௭
நிலக்கீ ழமர்செயு நேரிலாப் படையே. ௮௬௮
நீர்மிசை யமர்செயு நீர்க்கலப் படையே. ௮௬௯
வானிற் றிரிதரும் விமானப் படையே. ௮௭0

## ௮௮-ம் அதி.—படைக்கலம்.

படைக்கலம் பகைசெறப் படைகை யெடுப்பன. ௮௭௧
படைக்கல மில்லெனிற் படையுமின் றாகும். ௮௭௨
படைக்கல மீட்டல் பயப்பொரு ளீட்டலே. ௮௭௩
பகைத்திற னெண்ணியே படைக்கல மியற்றுக. ௮௭௪
விசையெரி கூருரம் விடமிக வியற்றுக. ௮௭௫
வெடிப்பன தெறிப்பன விசைமிகல் வேண்டும். ௮௭௬
எறிவன விடுவன வெரிமிகல் வேண்டும். ௮௭௭
குத்துவ வெட்டுவ கூர்மிகல் வேண்டும். ௮௭௮
உடைப்பன வறுப்பன வுரமிகல் வேண்டும். ௮௭௯
படைகொலும் படைக்கலம் விடமிகல் வேண்டும். ௮௮0

# அரசியல்.

## அகூ-ம் அதி.—படை யமைத்தல்.

பகைத்திற னழிக்கும் வகைத்தே ரியற்றுக. அஅக
பகைக்குழுச் சிதைக்கும் வயக்களி றீட்டுக. அஅஉ
குறித்த நெறிசெலுங் குதிரைகள் கொள்ளுக. அஅங
இறத்தலி னின்புறூஉ மறத்தினர்க் கூட்டுக. அஅச
தேர்மா பரியாள் சேனையா வகுக்க. அஅரு
துறைப்படுத் தேகுதற் காஞ்சில வியற்றுக. அஅசு
கடல்செலும் பலவகைக் கலங்களு மியற்றுக. அஅஎ
விண்செலும் பலவகை விமானமு மியற்றுக. அஅஅ
அவையாள் படைப்படைக் கலமொடு வழங்குக. அஅகூ
வரிசைத் தலைவரா வுரியரை யுயர்த்துக. அகூ0

## கூ0-ம் அதி.—படை யளித்தல்.

படைதன் னுயிரெனப் பார்த்துமன் னோம்புக. அகூக
தினம்படை நோக்கித் திறன்மிகுந் திடச்செயல். அகூஉ
அவரவர் திறனறிந் தளிக்க வேதனம். அகூங
படையுவப் புறச்சீர் பரிசிலும் வழங்குக. அகூச
அமரிற் படுபவர் தமர்தமை யோம்புக. அகூரு
படைகளின் கடன்தாம் பகைகொலல் கொலப்படல். அகூசு
கூற்றையு மெதிர்த்திடு மாற்றலொடு செல்லல். அகூஎ
இழைத்த திகவாஅ திறந்துபுகழ் கொள்ளல். அகூஅ
தலைவரின் சொல்லெலா நிலையுறப் பணிதல். அகூகூ
தலைவரைத் தமதுநற் றுயிினும் பேணுதல். கூ00

# மெய்யறம்

## ௯௧-ம் அதி.—நட்பு.

நட்பெனப் படுவது பெட்புறு கேண்மை. ௯௦௧
அதுநன் மகாருளத் தலரு நன்மலர். ௯௦௨
அதனிய லடுத்தவ ரகநக விரும்பல். ௯௦௩
இடித்துக் கூற லிடுக்கண் களைதல். ௯௦௪
புணர்ச்சி பழகுத லுணர்ச்சியா னட்பாம். ௯௦௫
ஆய்ந்துநன் னட்பறிந் ததன்பின் கொள்ளுக. ௯௦௬
ஆய்ந்தறி யாதுறல் சாந்துயர் தருமே. ௯௦௭
மருவிப் பன்னா ளொருவா தாய்க. ௯௦௮
வாய்க்கா லனைய மாந்தரை நட்டல். ௯௦௯
சூட்டுக் கோனிகர் துணைவரைக் கொள்க. ௯௧௦

## ௯௨-ம் அதி.—பழமை.

பழமையெத னாலுங் கிழமைகுன் றாதது. ௯௧௧
அஃதுயர் நட்பி னருங்கனி யாகும். ௯௧௨
பழமையி னின்பம் பயப்பதொன் றில்லை. ௯௧௩
பழயவர் பிழைப்பினும் பழமைமா றற்க. ௯௧௪
அழிவந்த செய்யினு மன்பறா ராகுக. ௯௧௫
பழமையை மறப்போர் பாம்பினுங் கொடியர். ௯௧௬
அலக்கணுங் கேடு மழிவு முறுவர். ௯௧௭
பழமையை விடாரைப் பாரும் விடாது. ௯௧௮
பழையார்ப் பிரியாரை விழையாரும் விழைப. ௯௧௯
பழமையைப் புதுமையிற் பார்ப்போர் பெரியர். ௯௨௦

# அரசியல்.

## ௯௩-ம் அதி.—ஆகா நட்பு.

ஆகா நட்பிவ ணழிவுபழி தருவது. ௯௨௧
அவைநனி தருபவ ரறிவில் பேதையர். ௯௨௨
உறுவதே நூக்குஞ் சிறுமைமிகு மாந்தர். ௯௨௩
வினையொடு தஞ்சொல் வேறுபடு வஞ்சகர். ௯௨௪
ஒல்லுங் கரும முஞற்றாக் கள்ளர். ௯௨௫
மிகைபல விழைத்து நகைசெய்யும் பகைவர். ௯௨௬
பக்கத் துறைந்து பதம்பார்த் திருப்பவர். ௯௨௭
அட்டைபோ லொட்டிநின் றரியவை கவர்வோர். ௯௨௮
கள்ளுங் கவறுங் கைவிடாப் பதகர் ௯௨௯
விடருந் தூர்த்தரு நடருமுள் ளிட்டோர். ௯௩௦

## ௯௪-ம் அதி.—இகல்.

இகலெனப் படுவ துளமாறு பாடு. ௯௩௧
நகறரு நட்பிற் கிகன்மறு தலையாம். ௯௩௨
அதனிய லடுத்தவ ரழமனம் விரும்பல். ௯௩௩
இடருற மொழித லிடுக்கண் புரிதல். ௯௩௪
எதிருணர் வழுக்கா றிறுகுளத் தால்வரும். ௯௩௫
இகலுள மென்று மெரிந்து துன்புறும். ௯௩௬
அன்போ தட்பமோ வின்போ வுறாது. ௯௩௭
இகல்பா ராட்டுவார் தகல்காண் பரிது. ௯௩௮
அருமைச் சுற்றமு மாக்கமு மிழப்பர். ௯௩௯
கேடு மழிவுங் கிளைகளாக் கொள்வர். ௯௪௦

## ௯௫-ம் அதி.—பகைமை.

பகைமை யென்ப திகலது முதிர்வு. ௯௪௧
பழமையின் மறுதலை பகைமையென் றறிக. ௯௪௨
பகைமையுட் கொடியதுட் பகைமையென் றறைப. ௯௪௩
அதனினுங் கொடியதிங் கரியவை கவர்வது. ௯௪௪
பகைமையை யுட்கொள றகைமையன் றென்ப. ௯௪௫
அதைவிடா தவர்பா லியாதிவண் செய்வது. ௯௪௬
அன்புபா ராட்டி யவரை வளர்ப்பதோ. ௯௪௭
ஈகையென் றவர்காத் தின்னுயிர் விடுப்பதோ. ௯௪௮
அறமென வெண்ணித் துறவினைக் கொள்வதோ. ௯௪௯
தம்மா ருயிரைத் தாமழித் தொழிவதோ? ௯௫௦

## ௯௬-ம் அதி.—பகையடு நெறி.

பகைமையை விடாரைப் பகைத்தடல் வழக்குக. ௯௫௧
பகையினை யடற்குப் பலபல நெறியுள. ௯௫௨
எதற்கும் பொருளறி வின்றியமை யாதவை. ௯௫௩
ஒல்லு மிடத்தெலாம் வெல்லு மமர்நலம் ௯௫௪
ஒல்லா விடத்தினி லுபாய முறைநலம். ௯௫௫
முறையின் சொல்லே கொடைபிரிப் பழிப்பே. ௯௫௬
முன்னைய விரண்டுந் தன்னினும் வகைசெயல். ௯௫௭
பின்னைய விரண்டும் பெருந்துணை கொடுசெயல். ௯௫௮
உட்பகை யினரை யுட்பகைத் தடுக. ௯௫௯
ஓட்டிமேய் வாரை யொட்டிமேய்ந் தடுக. ௯௬௦

## ௬௭-ம் அதி.—அமர்வகை.

அமர்வகை நான்கென வறைகுவ ரவைதாம், ௬௬௧
வெட்சியே வஞ்சியே யுழிஞையே தும்பையே. ௬௬௨
வெட்சிநல் லுயிர்களை விரோதிபாற் கவர்தல், ௬௬௩
அதினிக ழும்பல வமருஞ் செயலும். ௬௬௪
வஞ்சிமண் ணசைமன் னஞ்சவடல் குறித்தல்; ௬௬௫
அதினிக ழும்பல வமருஞ் செயலும். ௬௬௬
உழிஞையரண் முற்றி யுரத்தினாற் கோடல். ௬௬௭
அதினிக ழும்பல வமருஞ் செயலும். ௬௬௮
தும்பைமுன் வந்தமன் மைந்துதலை யழித்தல் ௬௬௯
அதினிக ழும்பல வமருஞ் செயலும். ௬௭0

## ௬௮-ம் அதி.—அமர்த் திட்பம்.

அமர்த்திட்ப மொருவ ரகத்திட்ப மென்ப. ௬௭௧
ஊறுறு தாற்றுக வூறுறிற் றளரேல். ௬௭௨
அமர்க்கெழும் வரையய லறியா தமைக. ௬௭௩
சொல்லுத லெளிது செய்தலோ வரிது. ௬௭௪
அமரின்மாண் டாரை யனைவருந் துதிப்பர். ௬௭௫
திண்ணியா ரெண்ணிய வெண்ணியாங் கடைவர். ௬௭௬
உளிபோல் வாருள ருருக்கண் டிகழேல். ௬௭௭
துணிந்தநல் லமரினைத் தூங்கா தாற்றுக; ௬௭௮
பெரும்பயன் றருமமர் வருந்தியுஞ் செய்க. ௬௭௯
அமர்த்திட்ப மிலாரை யாருமே வேண்டார். ௬௮0

# மெய்யறம்

## ௯௯-ம் அதி.—வலி யறிதல்.

தனது படையையுந் தனத்தையு மறிக. ௯௮௧

பகையது தனத்தையும் படையையு மறிக. ௯௮௨

தன்றுணைப் படையையுந் தனத்தையு மறிக. ௯௮௩

பகைத்துணை தனத்தையும் படையையு மறிக. ௯௮௪

இருதிறப் படைகளி னேற்றத்தாழ் வறிக. ௯௮௫

இருதிறப் படைக்கல வேற்றத்தாழ் வறிக. ௯௮௬

எவ்வமர் செயறனக் கெளிதென் றறிக. ௯௮௭

அதுகொளும் பொருள்படை யாதிய வறிக. ௯௮௮

அயன்மன் வரிஞு டளிக்குமா றறிக. ௯௮௯

அணையவு மறிந்துபி னமர்செயத் துணிக. ௯௯௦

## ௧௦௦-ம் அதி.—கால மறிதல்.

வலிமிகு கூகையைப் பகல்வெலுங் காகம். ௯௯௧

ஆகுங் காலத் தறியவு மாகும். ௯௯௨

ஆகாக் காலத் தெளியவு மாகா. ௯௯௩

தனக்காங் காலஞ் சார்ந்தமர் தொடங்குக. ௯௯௪

பகைகெடுங் காலம் பார்த்தமர் தொடங்குக. ௯௯௫

பருவம் வரும்வரை பகைவர்க் கடங்குக. ௯௯௬

பருவம் வரினுடன் பகைவரை யடக்குக. ௯௯௭

கூம்பும் பொழுது கொக்கொத் தமர்க. ௯௯௮

அடர்க்கும் பருவத் ததுபோற் குத்துக. ௯௯௯

காலமறிந் தேசெயின் ஞாலமுட னெய்தும். ௧௦௦௦

## அரசியல்.

### க௦௧-ம் அதி.—இட னறிதல்.

நெடும்புன லுண் முதலையா லடுங்களிறு படுமே. க௦௦௧
முதனிலத் தெறும்பான் முதலையும் படுமே. க௦௦௨
கால்வ னெடுந்தேர் கடலோ டாதே. க௦௦௩
நிலமிசை நாவாய் நின்றோ டாதே. க௦௦௪
முரண்சேர்ந் தவர்க்கு மரண்சேர்த னன்று. க௦௦௫
மேலிருந் தமர்செயல் வெல்வோர்க்கு நன்று. க௦௦௬
பெருமலை யரணுள பேடியும் வெல்லும். க௦௦௭
சிறுபகை தன்னிடத் துறுபகை யழியும். க௦௦௮
தெரியா விடத்துப் பெரியாரு மழிவர். க௦௦௯
இடங்கண் டல்லது தொடங்கிடே லமரே. க௦௧௦

### க௦௨-ம் அதி.—அமர் துணிதல்.

ஒருமா னிடவுயிர்க் குலகெலா மாற்றா. க௦௧௧
பலமா னிடர்தாம் படுமமர் நன்றோ? க௦௧௨
படுமா னிடரிற் பலருயி னன்றும். க௦௧௩
இவ்வொன் றலாலமர்க் கேதுபிறி தில்லை. க௦௧௪
ஆன்றோ ரிதனையே யமர்க்கேது வென்ப. க௦௧௫
அளிக்கப் படுவன வழிவென வெண்ணுக க௦௧௬
அளிக்கப் படுவன வதிகமேற் றுணிக. க௦௧௭
பொருள்படை யமர்த்திறன் பொழுதிட னெண்ணுக.
அவைபகை யிற்றனக் கதிகமேற் றுணிக. க௦௧௯
அன்றே லுலகெலா மழியினும் விடுக. க௦௨௦

## மெய்யறம்

### ௧௦௩-ம் அதி.—தூது விடல்.

தூதொரு வர்க்குச் சொலச்சொலுஞ் சொல்லே. ௧௦௨௧
எதிரியை யிணைத்தற் கெண்ணிய சொல்லே. ௧௦௨௨
அறவா சமர்முன ரதுவிடல் வழக்கே. ௧௦௨௩
அமையு மிடத்தெலா மதுவிடல் கடனே. ௧௦௨௪
அறியாப் பகைக்கறி வளித்தலுங் கடனே. ௧௦௨௫
தூதுரைப் பாரிய ராய்மையே வாய்மையே. ௧௦௨௬
அன்பே துணிவே யழகே யாற்றலே. ௧௦௨௭
நூலெலா மறிந்துள நுண்ணறி வுடைமையே. ௧௦௨௮
அமையமும் பிறவு மறிந்துசொலுந் திறனே. ௧௦௨௯
அமைச்சரா சியலெலா மமைந்துள தன்மையே. ௧௦௩௦

### ௧௦௪-ம் அதி.—அமர் செய்தல்.

தூதினுந் தெருளாத் தியரை யடன்முறை. ௧௦௩௧
அவரை யறவடா தவர்தீ தடறலே. ௧௦௩௨
அரும்படை பெருக்கி யவரஞ் சச்செயல். ௧௦௩௩
அறியா நெறியா லவரைச் சிறைகொளல். ௧௦௩௪
அவரய லமர்செயு மமையத் தாண்கொளல். ௧௦௩௫
அவரது பகைகொண் டவர்மற வலியடல். ௧௦௩௬
அவரிற் சிலர்கொண் டவர்மற வலியடல். ௧௦௩௭
அவரிற் சிலர்பிரித் தவர்மற வலியடல். ௧௦௩௮
அமையு மமர்செய் தவர்மற வலியடல். ௧௦௩௯
அளவுக் கதிக மடுவது தீது. ௧௦௪௦

# அரசியல்.

## ௧௦௫-ம் அதி.—வெற்றியடைதல்.

வெற்றிதன் பொருளை மீட்டர சாளுதல். ௧௦௪௧
பகைமறம் விடவும் யணியவுஞ் செய்தல். ௧௦௪௨
பகையவை செயும் வரை பக்கநாட் டமர்த்தல். ௧௦௪௩
பகைமற வலிகெடும் வகையெலாந் திருத்தல். ௧௦௪௪
அறஞ்செயு மாறதற் கதனு டீதல். ௧௦௪௫
வேரொடும் பகையடல் வெற்றியென் றறைப. ௧௦௪௬
அஃதரும் பெருமற மாமென் றறிக. ௧௦௪௭
அமர்பகை யெச்ச மனலதா மென்ப. ௧௦௪௮
அனலற வொழிப்பவ ரியாங்கணு முளரோ? ௧௦௪௯
அடாஅ வகையதை யடக்கிவைத் தாளுக. ௧௦௫௦

## ௧௦௬-ம் அதி.—அரசு கோள்ளல்.

அரசினைத் தருதற் கருகரந் தணரே. ௧௦௫௧
அருளறி வமைந்துள வறவோ ரந்தணர். ௧௦௫௨
அவரிலை யெனிற்றரற் கருக ரரசரே. ௧௦௫௩
மறத்தினைச் சிதைக்குந் திறத்தின ரரசர். ௧௦௫௪
அவரிலை யெனிற்றரற் கருகர் வணிகர். ௧௦௫௫
பொருள்வே ளாண்மை புரிபவர் வணிகர். ௧௦௫௬
அவரிலை யெனிற்றரற் கருகர் பிறரே. ௧௦௫௭
பிறர்பிற தொழிலெலாம் பேணியிங் காள்பவர். ௧௦௫௮
அனைவருந் தரக்கொள லதிகநன் றென்ப. ௧௦௫௯
அறஞ்செயத் தானர சாதலும் வழக்கே. ௧௦௬௦

# மெய்யறம்

## க0எ-ம் அதி.—குடி புரத்தல்.

குடியெலா மகவெனக் கொண்டுமன் னோம்புக. க0சுக
அவர்க ளியாவரு மறிவுறச் செய்க. க0சுஉ
அரியகைத் தொழில்சில வறிந்திடச் செய்க. க0சுங
படைக்கலப் பயிற்சியிற் பாடுறச் செய்க. க0சுச
பொருளைக் குடியின் பொதுவெனப் பெருக்குக. க0சுரு
குடிபொருள் செய்தற் கடிமுதல் வழங்குக. க0சுசு
குடியில் வாழ்ந்திடக் குறைந்தன வழங்குக. க0சுஎ
குடிசெயூ தியத்துட் குடியினர் வாழ்க. க0சுஅ
பொன்றுநாண் மிஞ்சிய பொதுப்பொரு ளொடுகொளல்.
குடிபசித் துழலன்மன் குற்றமென் றறிக. க0எ0

## க0அ-ம் அதி.—இறை கோள்ளல்.

இறைகுடி யூதியத் திறைகொளு மளவே. க0எக
அஃதறு பங்கிலொன் றுமென மொழிப. க0எஉ
இறையிலா ரென்றனு ளிறையினர் வாழ்க. க0எங
ஒன்றிறை கொளநடு வுதவிட வழங்குக. க0எச
ஒன்றினுட் டகம்புற மோம்பலை நடாத்துக. க0எரு
ஒன்றினூர் நிலநல முயர்ந்திடச் செய்க. க0எசு
ஒன்றினே கல்வியோ டியாற மாற்றுக. க0எஎ
மிஞ்சுவ பொதுவொடு வேந்துவைத் தோம்புக. க0எஅ
புவிநலங் குன்றிற் பொதுப்பொருள் வழங்குக. க0எகூ
மறமன் னிலங்கொளத் திறஞ்செய வழங்குக. க0அ0

## அரசியல்.

### ௧௦௯-ம் அதி.—முறை செய்தல்.

குடியது குற்றமன் கடிவது முறையாம். ௧௦௮௧
கடியு மியல்தன் காரணம் போக்கல். ௧௦௮௨
காரணம் போம்வரை காப்பினுள் வைத்தல். ௧௦௮௩
எதற்குமோர் வகையறி விலாமையே காரணம். ௧௦௮௪
செய்தகைச் செய்ய விடாமையே காப்பு. ௧௦௮௫
இவையே யறமுறை நவையே பிறவெலாம். ௧௦௮௬
முறைகண் ணோடா துயிர்வௌவ லென்ப. ௧௦௮௭
அம்முறை யழிவுறு மரசுசெய் மறமுறை. ௧௦௮௮
களையறி யாமை நிலங்குடி யொக்கும். ௧௦௮௯
களையோ களையுடை நிலமோ களைவது. ௧௦௯௦

### ௧௧௦-ம் அதி.—அறம் புரிதல்.

அறமன் னுயிர்த்துய ரறுக்கு நல்வினை. ௧௦௯௧
அவ்வினை யுயிர்தொறும் வெவ்வே றுருகும். ௧௦௯௨
அவையுடன் கண்டுநன் காற்றுதன் மன்கடன். ௧௦௯௩
துயர்முத லுயிர்க்கெலாந் துப்புர விலாமை. ௧௦௯௪
அதனத னிடத்ததை யமர்த்திவை யாமை. ௧௦௯௫
ஆறறி வினர்க்குநல் லறிவில்லாமை. ௧௦௯௬
உயிரெலா மதனத னுணவுற வோம்புக. ௧௦௯௭
அதனத னெல்லையு ளமர்த்திவைத் தாளுக. ௧௦௯௮
ஆறறி வினர்க்குநல் லறிவெலாம் வழங்குக. ௧௦௯௯
அறவிரி திருக்குற ளாதியா லறிக. ௧௧௦௦

அரசியல் முற்றிற்று.

## மெய்யறம்

## அந்தணரியல்.

### ககக-ம் அதி.—அந்தண ரியல்பு.

அந்தண ரறத்தொடு செந்தண்மை பூண்டவர். கக0க
மாணவர் தம்மையே வளர்க்கு மியல்பினர். ககஉ
அடுத்தவர் தம்மையு மளிப்பவரில் வாழ்வார். ககஙு
அரசர்நல் லுயிரெலா மளிக்குந் திறத்தினர். ககச
அனைத்துயிர் தம்மையு மளிப்பவ ரந்தணர். ககரு
முதன்மூந் நிலையினர் முகைமலர் காயனர். ககசு
அந்தணர் மெய்ந்நிலை யடைந்தவர் கனிவிதை. ககஎ
விதையே மரமிலை மென்முகை யாதியாம். ககஅ
மெய்யே யுலகுயி ரைந்நிலை யினராம். கககூ
முறைமுகை விதையா முதனிலை யுயிர்மெயாம். ககக0

### ககஉ-ம்—அதி. அந்தண ரொழுக்கம்.

ஓதலி னந்தணர்க் கொழுக்கநன் றென்ப. ககக
அந்தணர்க் கொழுக்க மனற்குச் சூடுபோன்ம். கககஉ
ஒழுக்கமு மறிவு முடனிகழ் தகைமைய. கககஙு
ஒன்றின் றெனின்மற் றதுவு மிலதாம். கககச
ஞானச் சொல்லெலாங் கானற் சலமாம். கககரு
ஒழுக்க மறிதற் குரைகளின் றென்ப. கககசு
பகுத்தறி வறநா லுகுத்தவ ரேயவர். கககஎ
ஒழுக்கமெவ் வுயிர்க்கு மூறுசெய் யாமை. கககஅ
இயலு நன்றெலா மிடைவிடா தியற்றல். கககசூ
இழுக்கமிவ் விரண்டிலொன் றியற்றத் தவறல். ககஉ0

## அந்தணரியல்.

### ககங-ம்அதி.—கூடா வொழுக்கம்.

சாமிக ளுட்பலர் காமிக ளாயினர். ககஉக
தேசிக ருட்பல ராசின ராயினர். ககஉஉ
மகந்துக ளுட்பல ரிகந்தன ரொழுக்கம். ககஉங
தம்பிரான் மறமெலா மெம்பிரா னறிவர். ககஉச
போலியந் தணர்பலர் புரியா மறமிலை. ககஉரு
அரசரு ளுளர்மறங் காவினி லாள்பவர். ககஉசு
இல்வாழ் வினருளும் புல்வாழ் வினருளர். ககஉஎ
மாணவ ருளுமுளர் கோணல் கொண்டவர். ககஉஅ
உலக மென்றுநல் லொழுக்கங் கொள்ளும்? ககஉகூ
உள்ளும் புறமு மோரியல் பூணும்? ககங0

### ககச-ம் அதி.—மானங் காத்தல்.

மானமென் பதுதம் மதிப்பை விடாமை. ககஙக
தத்தந் நிலைக்குத் தாழ்ந்தசெய் யாமை. ககஙஉ
தத்த மியற்குத் தக்கவா றொழுகல். ககஙங
மானொரு மயிரற மாயுமவ் விடத்தே. ககஙச
மனிதர்தம் மதிப்பற வாழ்ந்திடல் வியப்பே. ககஙரு
மாணவ ரிழுக்கலின் மனித னன்றே. ககஙசு
இல்லின ரிவறலி னிறத்த னன்றே. ககஙஎ
அரசறஞ் செயாமையி னழித னன்றே. ககஙஅ
தாழ்ந்தார்த் தெறுதலிற் சாத னன்றே. ககஙகூ
அந்தணர் வெகுளலி னழற்புக னன்றே. ககச0

# மெய்யறம்

## ௧௧௫-ம் அதி.—வெஃகாமை.

வெஃகுதல் பிறர்பொருள் விரும்புங் குற்றம். ௧௧௪௧
வெஃகலை மறத்தின் வித்தென மொழிப. ௧௧௪௨
அதுதீ யவாவி னங்குர மாகும். ௧௧௪௩
காமமுங் களவுங் கலிதழை யிலைவிடும். ௧௧௪௪
கொலையும் பொய்யுமாங் கொம்பொடு கிளைவிடும். ௧௧௪௫
அழிதகு மறங்களா மரும்பொடு மலர்விடும். ௧௧௪௬
பழியுங் கேடுமா யழியாக் காய்தரும். ௧௧௪௭
அழிபல நிரயக் கழிபெருங் கனிதரும். ௧௧௪௮
பொறிவழித் துன்பமாஞ் செறிபல சுவையாம். ௧௧௪௯
ஆதலால் வெஃகலை யறவே விடுக. ௧௧௫௦

## ௧௧௬-ம் அதி.—வெகுளாமை.

வெகுளி யகத்தெழும் வெங்கனற் சுடரே. ௧௧௫௧
இச்சுடர் தம்மையு மினத்தையு மழிக்கும். ௧௧௫௨
நகையை யுவகையைத் தகையைக் கொல்லும். ௧௧௫௩
பகையைச் சொல்லரும் வகையில் வளர்க்கும். ௧௧௫௪
மிகையுந் துயரு மிகுந்திடச் செய்யும். ௧௧௫௫
வெகுளியை விடற்கவ் விருப்பமுட் கொள்ளுக. ௧௧௫௬
வெகுளியுள் ளெழுங்கா னகுதலை புரிக. ௧௧௫௭
வெகுளியின் கேடெலாம் விரைந்துட னெண்ணுக. ௧௧௫௮
ஆடிகொண் டுடன்முக வழகினை நோக்குக. ௧௧௫௯
வெகுளியை யடுதலே தகுதியென் றடுக. ௧௧௬௦

## ககள-ம் அதி.—இன்னா செய்யாமை.

மன்னுயி ருளமுடல் வருத்துவ தின்னா. ககசுக
அவைதீச் செயலே யச்சொலே நினைப்பே. ககசுஉ
கொடியது செயலுட் கொலையென மொழிப. ககசுங
கொலையினு மிந்தியங் களைவது கொடியது. ககசுச
அவைகெட வதைசெய லதனினுங் கொடியது. ககசுரு
கொடியவை சொல்லுட் குறளைபொய் நிந்தை. ககசுசு
கொடியவை நினைப்புட் கொலைமுக னினைப்பு. ககசுஎ
இன்னா செய்தார்க் கின்னா வந்துறும். ககசுஅ
ஒன்றொரு கோடியாய்ப் பின்றைநாள் வந்துறும். ககசுகூ
உற்றவுயி ரறிவள வுறுத்தும் நிற்கும். ககஎ0

## ககஅ-ம் அதி.—தவஞ் செய்தல்.

தவமென் பதுதனைச் சார்ந்தநோய் பொறுத்தல். ககஎக
உணர்வுடை யுயிர்கட் கூறுசெய் யாமை. ககஎஉ
கைந்நிலை விடாது மெய்நிலை யுள்ளல். ககஎங
மனத்தை யடக்கி வசஞ்செய முயறல். ககஎச
அதற்கின் றி யமையா வப்பியா சங்கள். ககஎரு
தவஞ்செய லொன்றே தஞ்செய லென்ப. ககஎசு
தவத்தி னளவே தனமுறு மென்ப. ககஎஎ
தவமுடித் தாரே சமனைக் கடப்பர். ககஎஅ
தவமே யிகபரந் தருநன் முயற்சி. ககஎகூ
தவமே யியற்றுக தகவுற வேண்டுவோர். ககஅ0

# மெய்யறம்

## கககூ-ம் அதி.—துறவடைதல்.

துறவியா னெனதெனு முறவினை யொழித்தல். ககஅக
மன்னுயி ரெல்லாந் தன்னுயி ரென்றல். ககஅஉ
தன்பொருண் மன்னுயிர் தமதென வாழல். ககஅந
துறவென விவ்வகத் துறவையே மொழிப. ககஅச
புறத்துற வெல்லாம் பொய்த்துற வாமே. ககஅரு
துறவந் தணருக் குறவொழுக் கன்றோ? ககஅசா
தாய்தந் தையரைத் தள்ளலுந் தண்மையோ? ககஅஎ
தன்னுயிர்த் துணையைத் தவிர்தலுந் தண்மையோ? ககஅஅ
தீயவா மிவையெலாம் பேயா டுறவே. ககஅகூ
தமரையே யளியார் பிறவுயி ரளிப்பரோ? கககூ0

## கஉ0-ம் அதி.—அருள் புரிதல்.

அருள்பல வுயிர்க்கு மன்புபா ராட்டல். கககூக
உயிரெலா மெய்யது பயிரெனக் காண்க. கககூஉ
எவ்வகை யுயிர்க்கு மின்னா செயற்க. கககூந
அவற்றிற் காவன வனைத்து முதவுக. கககூச
தமையவை வருத்தினு மவைதமை யோம்புக. கககூரு
அருளுடை யார்மெய்ப் பொருளுடை வதுதிடம். கககூசா
அருள்பே றருள மருண்மிகு முண்மை. கககூஎ
சுயநயச் செயலரு ளினையற வோட்டும். கககூஅ
பரநயச் செயலருள் பரவிடச் செய்யும். கககூகூ
அருள்விடா தவரைமெய்ப் பொருள்விடா துண்மை. கஉ00

அந்தண ரியல் முற்றிற்று.

# மெய்யியல்.

## கஉக-ம் அதி.—மெய் யுண்மை.

உயர்கரி சுருதி யுத்தி யநுபவம். கஉ0க
தூயர் பகருரை சுருதி யென்ப. கஉ0உ
பல்மதத் தூயரும் பகர்ந்துள ருண்மை. கஉ0௩
எது சிலகொண் டோதுவ துத்தி. கஉ0ச
ஆத னிலவ லழித லிவனுள. கஉ0ரு
அவைசெயக் கர்த்தா வவசிய மென்க. கஉ0சு
அறிந்துள் ளுணர்தலே யநுபவ மென்ப. கஉ0எ
இடருறும் போழ்துமெய் யெண்ணுகின் றனர்பலர். கஉ0அ
பாவஞ் செயவுளம் பதைப்ப தநுபவம். கஉ0கூ
அரசரு மாளப் படுவ தறிகிறோம். கஉக0

## கஉஉ-ம் அதி.—மெய்யின் அடக்கநிலை.

அடக்க நிலைமெய் யடங்கிய வறிவு. கஉகக
அண்டப் பொருளெலா மணுக்களின் சேர்க்கை. கஉகஉ
வலியிலா தணுக்கண் மருவிநிற் கும்மோ? கஉக௩
அண்டஞ் சுற்றலு மதுகொண் டன்றோ? கஉகச
ஆதலா லெங்கணு மஃதமைந் துளதே. கஉகரு
அகில நிகழுமா றுள்வ தறிவு. கஉகசு
அன்றே லொழுங்கா வவைகண நிகழுமோ? கஉகஎ
ஆதலா லெங்கணு மறிவமைந் துளதே. கஉகஅ
நிறைபொரு ளிரண்டு நிலவா வென்ப. கஉககூ
ஆதலால் வலியு மறிவு மொரேபொருள். கஉஉ0

# மெய்யறம்

## ௧௨௩-ம் அதி.—மெய்யின் விளக்கநிலை.

விளக்க நிலைமெய் விளங்கு மறிவு. ௧௨௨௧
அடக்கமெய் விறகு ளடங்கிய தீப்போன்ம். ௧௨௨௨
விளக்கமெய் கடைய விறகெழுந் தீப்போன்ம். ௧௨௨௩
ஐயறி வுயிர்களின் மெய்யொளி யடங்கும். ௧௨௨௪
ஆறறி வினரு ளவ்வொளி விளங்கும். ௧௨௨௫
அவர்மறஞ் செயச்செய வதனொளி குன்றும். ௧௨௨௬
அவரறஞ் செயச்செய வதனொளி பெருகும். ௧௨௨௭
அவரொழுக் கறிந்தபோழ் தஃதக விளக்காம். ௧௨௨௮
அவரொழுக் கடைந்தபோழ் ததுமலை விளக்காம். ௧௨௨௯
ஒழுக்கில்வாய் ஞானமஃ தொழிக்குங் காற்றும். ௧௨௩0

## ௧௨௪-ம் அதி.—மெய் யுணர்தல்.

ஒழுக்க முடையா ருணர்வர் மெய்யை. ௧௨௩௧
அறநூ லெண்ணில வறைந்துள வொழுக்கம். ௧௨௩௨
அவற்றைவிட் டயலுற றவற்றைப் புரிதலாம். ௧௨௩௩
அடிவிட் டேணியி னந்தமே றுவரோ. ௧௨௩௪
அறநூல் கற்றுநின் றுண்மநூ லாய்க. ௧௨௩௫
ஒருட லளவி லுறுமறி வான்மா. ௧௨௩௬
அணையுள குளநீர்க் கான்மா விணையாம். ௧௨௩௭
ஆன்மா மெய்யொன் றுணவம் வேற்றுமை. ௧௨௩௮
அறஞ்சே ரொழுக்கா லாணவங் களைக. ௧௨௩௯
இலகுமெய் யுண்மை யுலகுமெய்த் தோற்றம். ௧௨௪0

## கஉரு-ம் அதி.—மெய்ந்நிலை அடைதல்.

உயரியல் விடமெய் யியலுறு முடனே. கஉசக
விடலே வீடது மெய்யறஞ் செயினும். கஉசஉ
மெய்யற மாந்தர் மிகைவிட வுதவல். கஉசங
ஒழுக்க வுயிர்மெய் யுணர்ந்திட வுதவல். கஉசச
உலகி லுயிர்க ணிலவுற வுதவல். கஉசரு
இவ்வற மரசர்க் கியற்றுத லெளிது. கஉசசா
அறிவ ரரச ராகுத லரிதோ? கஉசஎ
அரசரை யாள்வ தமைச்சறி வன்றோ? கஉசஅ
அறிந்தில் வாழ்ந்துல காண்டறஞ் செய்க. கஉசகூ
அருள்கொடு மெய்யற மாற்றிமெய் யடைக. கஉரு0

மெய்யியல் முற்றிற்று.

**மெய்யறம் முற்றுப்பெற்றது.**

---

# மெய்யறம்

# அரும்பதவுரை.

சூத்திரம். பதம். உரை.

## சிறப்புப்பாயிரம்.

௧ வையம்ஓர் - உலகம்அறிந்த.

௪ நுதலியது - (இந்நூல் கூறுக) கருதியது.

௮ ஆன்ற - (கல்விகேள்விகளால்) நிறைந்த.

௮ மாதேவன் - வித்வான் மகா தேவ முதலியார்.

## பாயிரம்.

௩ கற்றுரைத் தாற்றுவோன் - (தான்) கற்று (ப் பிறாக்கு) உரைத்து (அறத்தை)ச் செய வோன்.

௪ நுவல்திறன் - சொல்லும முறை.

௫ மெய் - கடவுள்.

௮ புரிந்தனன் - இயற்றினேன்.

## நூல்.

௧ மாண் - சிறப்பு.

௪ வரைநிலை - நீககப்படுதல்.

௬ கடன் - கடமை.

,, நன்று - அறம்.

௫ ஆதி - கடவுள்.

௧௧ உறும் - பொருந்தும்.

௧௪ சேருவ - பொருந்துவன.

௧௫ நணுகுவ - பொருந்துவன.

சூத்திரம். பதம். உரை.

௧௬ மடன் - மடமை.

,, மடி - சோம்பல்.

௧௭ நவிலும் - சொல்லும்.

௨௬ ஆம்துணை-இயையும்உதவி.

௨௯ அமைந்து - அடங்கி.

௩௦ இயைந்தவர் - பொருந்திய வர்.

௩௩ செறிவாய் - இடையீடில் லாமல்.

௩௪ பகுத்தறியுயிர்-மனிதர்.

௩௬ உள்ளல் - நினைத்தல்.

௩௭ உள்ளியாங்கு - நினைத்த வண்ணம்.

௩௯ நடுவு - நீதி.

,, ஓர்ந்து - அறிந்து.

௪௦ நிலை - தன்மை.

௪௧ தொடர்பு - சேர்க்கை.

௪௨ சிதைக்கும் - கொல்லும், வருத்தும்.

௪௩ வவ்வும் - கவரும்.

,, மாக்கள் - இழிமககள்.

௪௪ துணைவர்-உயிர்த்துணைவர்.

,, மாஇனத்தார்-மிருகக் கூட் டத்தினர்.

௪௬ புரைவளர் - குற்றத்தை வளர்க்கும்.

௪௭ கயவர் - கீழ்மக்கள்.

௪௮ பசு - உயிர்; ஜீவன்.

# அரும்பதவுரை.

சஅ பதி - இறை; சிவன்.
ுரு மன்னி - பொருந்தி.
கூஉ இருபாலாரும் - ஆடவரும் மகளிரும்.
கூரு அறிதிறன்-உணரும்வலிமை.
கூஎ மகார் - மக்கள்.
கூஅ செறிந்திட - உள்ளத்தில் அமைய.
கூகூ வல்லுநர் - வல்லவர்.
எக தலைப்படும்-முதன்மையுறும்.
எரு தொகுதி - கூட்டம்.
எச அறிவுஉரன்-அறிவின்சக்தி.
எகூ தனு - கருவி.
எஎ மெய்முதலிய-ஐம்பொறிகள்.
அ0 உய்ப்பது - செலுத்துவது.
அக மூத்தொழில் — ஆக்கல், அளித்தல், அழித்தல்.
,, அறன் - புண்ணியம்.
,, மறன் - பாவம்.
கூ0 எணும் - எண்ணும் - நினைக்கும்.
கூச உரன் - வலிமை.
,, வரன் - கணவன்.
கூகூ வளி - வாதம்.
,, அனல் - பித்தம்.
,, நீர் - சிலேத்துமம்.
கூஎ மறுத்து - குறைத்து.
கூஅ சிலம்பம் - சிலம்பவரிசை.
கூஅ மெய்ப்பயிற்சி-தேகாப்பியாசம்
க00 விளைந்திட-வேலைசெய்ய.
க0க நிலை - உடல்.
க0ரு படும் - இறக்கும்.
க0அ தொழுநோய்-பெருவியாதி.
க0அ அழும்நோய் - கண்ணீர் பெருகச்செய்யும் பிணி.
கக0 கூற்றம் - எமன்.
ககக அரித்த - தின்ற.
ககச அரி - சிங்கம். [சம்.
ககஎ மக்களுஞ் - மனிதமாமி
,, மறி - ஆடு.
ககஅ பொறி-மெய்,வாய், கண் மூக்கு, செவி.
கநஅ கவறு-சூதாடுகருவி.
கச0 கவறுஉருள்களம் - சூதாடும் இடம்.
கசந ஏற்றம்-உயர்வு.
கசச பரந்து-பல இடங்களுக்குச்சென்று இரந்து.
கருஅ வழங்கும்-கொடுக்கும்.
ககூக நிகழாதது-நடககாதது.
,, நிகழ்த்துதல்-சொல்லுதல்.
ககூகூ வாயில் - வழிகள்.
கஎ0 ஒரீஇயவர்-நீக்கியவர்.
கஎச பொருநகை - அமர் செய்யும் விரோதிகள்.
கஎஅ புன்மை - இழிவு.
கஎகூ பொன்றல் - இறத்தல்.
கஅ0 அடி - வேர்.
கஅஅ நயன் - இன்பம்.
கஅகூ பதடி - மனிதப்பதர்.
ககூஉ இழுக்காறு -குற்றநெறி.
ககூகூ சிறுமை - துன்பம்.
ககூஎ கீழ் - கீழ்மக்கள்.
,, வழுக்காறு - வழுக்குகின்ற நெறி.
ககூஅ இலங்குதல்-நிலவுதல்.
உ0அ தாய்மொழி-சுயபாஷை.
உகக மெய்யுறுப்பு-சரீர அவயவம்.
உகஎ நடை - ஒழுங்கு.

# மெய்யறம்.

௨௧௯ உரு - வேடம்.
௨௨௨ அமைவுற - பொருந்த.
௨௩௪ உற்றுழி - துன்பம் உற்ற இடத்து.
௨௩௯ மிகை - குற்றம்.
௨௪௧ நடுவுள்-அளவுள்; எல்லையுள்.
௨௪௩ நடுவு - நடுவுநிலைமை.
௨௬௮ இகந்தார் - நீங்கியவர்.
௨௫௧ புலம் - விஷயம் - ஸப்தம், ஸ்பரிஸம், ரூபம், ரஸம், கந்தம்.
௨௬௫ ஒன்றுக்கல் - ஒத்திருக்கச் செய்தல்.
௨௭௧ ஓரீஇ - விலக்கி.
௨௭௨ அற்றம்-இறுதி; அழிவு.
௨௭௨ ஆவன - நன்மை பயக்கும் வினைகள்.
௨௭௭ எளியவா - கேட்போர் அறியத்தக்க சொற்களாக.
,, செல - கேட்போர் உள்ளத்தில் புகும்படி.
,, அரியவை - (பிறர்சொல்லும்) எளிதில் அறியமுடியாத சொற்களை.
௨௮௦ எதிரதா - வருமுன்னர்.
௨௮௫ உயிர்க்கும் - சுவாசமிடும்.
௨௮௯ ஊஉறு-இடையூறு. [தோற்க.
௨௯௩ முதுகிட - முதுகுகாட்ட -
௨௯௭ ஆற்றின் - வழியில்.
௨௯௮ கொடு - கொண்டு. [னும்.
௨௯௯ தாழ்ப்பினும் - தாமதப்படி
௩௦௦ விரி - விரிவு.
௩௦௨ எதிர்பால் - ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும்.
௩௦௪ வேளாண்மை - பரோபகாரம்.
௩௦௬ இல்நிலை-கிருக ஆசிரமம்.
௩௧௨ எதிர் எதிர் வழி - (ஒன்றற்கொன்று) எதிராகஇருக்கும் இரண்டு வழிகள்.
௩௧௩ மட்டம்-மேலளவு.
௩௧௪ சதுரம் - நீளமும் அகலமும் பெருக்கக் கண்டதொகை.
௩௧௫ மேல் - மேலுள்ள.
௩௧௬ வளி - காற்று.
,, அனல் - தீ.
,, நீர் - வெள்ளம்.
,, மா - மிருகம்.
௩௧௭ ஒளி-சூரிய வெளிச்சம்.
௩௧௮ பகுத்திடல்-பிரித்திடுக.
௩௧௯ நிலஅறை-நிலக்கீழ்அறை.
,, மேல் - மேல் வீடு.
௩௨௦ தரு - மரம்.
௩௨௮ குடிமை-நற்குடிப்பிறப்பு.
,, தூய்மை-மனசுத்தம், வாக்குசுத்தம், காயசுத்தம்.
௩௨௯ பருவம் - வயது.
௩௩௦ வரவு-வரும்பொருள்.
௩௩௯ இயற்றுவ - செய்யுங்கருமங்கள்.
௩௪௨ அகப்பொருள்-அகப்பொருள் நூல்.
௩௪௭ நிமித்தம் - காரணம்.
௩௫௦ மெய்யிணைதல்- கடவுளை அடைதல்.
௩௫௯ அடும் - கொல்லும்.
௩௬௬ அவனியில்-உலகத்தில்.
௩௭௧ துணை - மனைவி.

# அரும்பதவுரை.

௩௭௩ முழுமகன் - அறிவிலி.

௩௭௭ நிறை - கற்பு.

௩௯௨ பொறி - ஐம்பொறிகள்.

௩௯௩ இகம் - உலகம்.

,, பரம் - கடவுள்.

௪00 பிழையாது - தவறாது.

௪0௧ ஏதம்-குற்றம்; நஷ்டம்.

,, ஊதியம்-குணம்; இலாபம்,

௪0௨ காதன்மை - காதலிக்கும் தன்மை.

௪0௬ புனை - தளை - விலங்கு.

௪0௮ களித்தற்று - கள்குடித்தது போலும்.

௪0௯ அவை - சபை.

௪௧௨ ஒண்மை - அறிவு.

௪௧௩ இவறல்-உலோபம்செய்தல்.

௪௧௬ மறை - இரகசியம்.

,, மிறை - துன்பம்.

௪௧௭ இழுக்கல் - தவறுதல்.

௪௨௫ படுபொருள்-வளர்பொருள்.

௪௨௯ உறுவது - வரும்வேலை.

௪௩௩ இறவு - குற்றம்.

௪௪௩ ஒன்னார் - பகைவர்.

௪௪௭ சோலைநீர் - சோலையிலுள்ள ஊற்றுநீர்.

௪௪௮ இளம்பகல் - பகல் பத்து நாழிகை.

௪௪௯ யாமம் - இரவில் நடுப்பத்து நாழிகை.

௪௫௧ அயர்வு - களைப்பு.

௪௫௩ சுழுத்தி - கனவற்ற கடும் உறக்கம்.

௪௫௯ மெய்த்தொழில் - உடலுறுப்புகளாற் செய்யப்படும் தொழில்.

௪௬௨ அங்குரம் - முளை.

௪௬௬ மெய்த்திறம் - உண்மையான வலி.

௪௬௭ தாழ்த்தியே-குறைத்தே.

௪௬௮ இறந்து-அளவுகடந்து.

,, படுவர்-அழிவர்.

௪௭0 ஈட்டுவர்-சேகரிப்பர்.

௪௭௯ எச்சம் - புகழ்.

௪௮0 நிச்சலும் - தினமும்.

௪௮௨ நகின் - சிரித்தால்.

௪௯௩ அரில் - குற்றம்.

௫00 செற்று - கோபித்து.

௫0௮ பயிற்றல் - பழக்கல்.

௫0௯ அழுக்கு - மாசு; பொறாமை.

௫௧௪ தகையர் - தகுதியுடையவர்.

௫௧௯ பற்றலர் - பகைவர்.

௫௨௪ மருந்து - அமிழ்தம்.

௫௨௫ காப்பு-பாதாட்சை முதலியன.

௫௩ப செல்வுழி-போகும் பொழுது.

௫௩0 உள்ளிட-(பிரிவை நினைந்து) வருந்த.

௫௩௧ துஞ்சிய - இறந்த.

௫௫௨ ஆர்வலர்-அன்பு செய்யப்பட்டவர்.

௫௫௩ தவல் - கெடுதல்.

௫௬௮ ஒறுத்தார் - பதில் தீங்கு செய்தார்.

௫௭௨ முதல் - வேர்.

௫௭௫ அறவோர் - அறம்புரிவோர்.

௫௭௬ துவ்வார் - வறிஞர்.

௫௭௮ நன்மை - சுபகாரியம்.
,, தீமை - அசுபகாரியம்.
௫௮௦ ஆணை - கட்டளை.
௬௦௪ சூழ்ச்சி - அறிஞரோடெண்ணுதல்.
௬௦௬ உரை - புகழ்.
௬௨௦ உணர்ச்சி - ஒருமைப்பட்ட உணர்வு.
௬௨௩ உற்றன - பொருந்தியன.
௬௪௦ சீர - பொருத்தம்.
௬௪௨ செம்மை - நடுவுநிலைமை.
௬௪௬ தவாவினை - கெடாவினை (அறம்).
௬௪௭ பொது-கணிதமும் பாஷையும்.
,, சிறப்பு - மற்றையன (பொருள் முதலியன).
௬௬௪ வினைஞர்-வினைசெய்வோர்.
௬௬௨ கடாஅ-(பார்த்தோர்) ஐயப்படாத.
௬௬௩ சிதைப்பினும் - வதைப்பினும்.
,, உகாமை - வெளிவிடாமை.
௬௬௬ கொற்றம் - செல்வம்.
௬௬௯ அயிராது - சந்தேகியாது.
௬௭௪ புணர்வு-இல்லாளோடு கூடி வாழும் வாழ்க்கை.
,, ஒழிவு - வீடு.
௬௮௨ அமைத்து - முடித்து; செய்து.
௬௮௯ பட்டி - விக்கிரமாதித்தனது மந்திரி. [தன்
௬௯௦ விக்கிரமன் - விக்கிரமாதித்
௬௯௫ ஒல்லும - பொருந்தும்.
௭௦௧ பாடு - பெருமை.
௭௦௮ உள்ளுட்க-உள்ளம்நடுங்க.
,, மேல்நகை-வெளியில்மாத்ரம் சிரித்தல்.
௭௦௯ சலவருள் - வஞ்சகருள்.
௭௧௦ எண்பதம்-காட்சிக்குளெளியனாயிருக்குந்தன்மை.
௭௧௨ திறை - கப்பம்.
௭௧௩ இளையா-பின்னிடாத.
௭௧௯ வினை - போர்.
௭௨௦ உளம் கொளா - மனம் திருப்தியடைய.
௭௨௨ மெய் - உண்மை.
௭௨௩ செவிச்சொல் - பிறன் செவியிற் சொல்லுதல்.
,, அயல்நகை - பிறன்முகம் நோக்கி நகுதல்.
௭௨௫ அமையம் - சமையம்.
௭௨௬ விழைபவற்றை-விரும்புவனவற்றை.
௭௨௭ ஐயுறுவகை - சந்தேகியாதவாறு.
,, யாங்கணும்-எவ்விடத்தும்
௭௩௧ கூறு - பிரிவு.
௭௩௮ முதுவர் - அறிஞர்.
௭௪௦ சொல்-சொல்லிவைத்த.
௭௪௪ நன்றுறல்-நன்மையடைதல்.
௭௪௭ உடன்படல் - ஒத்துக்கொள்ளுக.
௭௫௧ நாடுவ - விரும்பும் பொருள்கள்.
௭௫௨ மருவிய - பொருந்தியவை.
௭௫௪ உணு - உணவு.
௭௫௯ அயல் - பக்கத்துள்ள.

# அரும்பதவுரை.

எ௬௩ அமைதல்-நிரம்பியிருத்தல்.
எ௬௨ ஒககை - சரியாக.
எ௬௬ உறு பசி - மிக்க பசி.
,, அரும்பிணி - நீங்காதபிணி.
,, செறுபகை-அழிவு செய்யும் பகைவர்.
எ௬எ சீர் - புகழ்.
எ௬௯ தகை - பெருந்தன்மை.
எஎ0 மெய்யறிவு-கடவுள் ஞானம்
,, அமைந்து - நிரம்பி.
எஎஎ அருநிலம் - பகைவரைக் கொல்லும் கருவிகள் முதலியவற்றைக் கொண்டுள்ள நிலம்.
எஅஅ அகநெறி - நிலக்கீழ்வழி.
எ௯0 பொறி - கொல்கருவி.
எ௯௩ வலப்படை-வல்லமையுள்ள படை.
எ௯௫ கரவு - காட்சிக்குப் புலப்படாத படுகுழி முதலியன.
அகஎ நடை - ஒழுக்கம்.
அகஅ அலக்கண் - துன்பம்.
அக௯ உழந்து - வருந்தி.
அ௨0 அழியாது - நீங்காது.
அ௨க விளையுள் - விளைபொருள்.
அ௨௩ கிழவர் - உடையவர்.
அ௨௪ காடு - அடர்ந்த செடி முதலியன.
அ௪௬ மேம்பட - மேன்மையுற.
அ௫க படுத்தல் - கொல்லுதல்.
அ௫௫ மெய்யியல் - கடவுட்டன்மை.
அ௫அ உழல்வர் - வருந்துவர்.
அ௫௯ பிணக்குற்று - சண்டையிட்டு.

அஎ௩ பயப்பொருள் - பயன் தரும் பொருள்.
அஎ௫ எரி - தீ.
,, கூர் - கூர்மை.
அஅ௪ மறத்தினர் - வீரத்தையுடையவர்.
அஅ௫ மா - யானை.
,, பரி - குதிரை.
அஅ௬ அறைப்படுத்து-நிலக்கீழ் வழி செய்து.
அஅஎ கலங்கள் - கப்பல்கள்.
அ௯௩ வேதனம் - சம்பளம்.
அ௯௪ சீர்-பட்டம் முதலியன.
அ௯௪ பரிசில் - வெகுமதி.
அ௯எ கூற்றையும்-எமனையும்.
,, ஆற்றல் - வல்லமை.
அ௯அ இழைத்தது-செய்தசபதம்.
,, இகவாது-தவறாது
௯0௪ இடித்துக்கூறல் - புத்திகூறல்.
௯0௫ புணர்ச்சி - சேர்க்கை.
,, பழகுதல்-இடை இடையே கூடல்.
,, உணர்ச்சி - ஒரே வித உணர்வு.
௯௧௧ கிழமை - உரிமை.
௯௧௯ விழையார் - பகைவர்.
௯௨0 புதுமையில்- கண்டமாத்திரத்தில்.
௯௨௧ ஆகா - விலக்கவேண்டிய
௯௨௩ உறுவதே - தமக்கு வருவதையே.
,, தூக்கும்-ஆராயும்; நோக்கும்.
௯௨௫ ஒல்லும்-செய்யமுடியும்.

# மெய்யறம்

௯௫௨ உறாற்ற - செய்யாத.
௯௩௦ நடர் - பொய்யர்.
௯௩௭ தட்பம்-குளிர்ச்சி-கருணை.
௯௩௮ தகல் - தகுதி.
௯௪௩ அறைப - சொல்வர்.
௯௫௧ அடல் - வெல்லுதல்.
௯௮௮ மேய்வரர் - (அரியவற்றைக்) கவர்வார்.
௯௬௯ மைந்து - வலி.
,, தலையழித்தல் - நெருங்கி யழித்தல்.
௯௭௫ மாண்டார்-மாட்சிமைப்பட் டார்.
௯௭௮ தூங்காது - தாமதியாது.
௯௯௧ கூகை - கோட்டான்.
௯௯௮ கூம்பும் - அடங்கியிருக்கும்.
௯௯௯ அடர்க்கும் - கொல்லஎழும்.
௧௦௦௨ முதல்நிலம்-குறிஞ்சி.
௧௦௦௫ முரண் - வலி.
௧௦௦௮ உறுபகை - பெரும்பகை வர்.
௧௦௧௧ ஆற்ரு - நிகராகா.
௧௦௧௩ உயின் - பிழைப்பின்.
௧௦௫௧ முறை - நியாயம்.
௧௦௩௨ அடாது - கொல்லாது.
,, தலை - சிறப்பு.
௧௦௯௩ அடிமுதல்-மூலதனம்.
௧௧௬௦ தகுதி - நீதி.
௧௧௬௪ இந்தியம் - ஐம்பொறி.
௧௧௬௬ குறளை - புறங்கூறல்.
௧௧௬௯ பின்றைநாள் - பின்வரும் நாள்.
௧௧௭௦ உற்ற - துன்பமடைந்த.

௧௦௭௧ இறை-இறைப்பணம்.
,, இறை - அரசன்.
௧௦௭௫ ஓம்பலை - காப்பை.
௧௦௮௧ கடிவது - களைவது.
௧௦௮௯ நவை - குற்றம்.
௧௦௯௧ அறுக்கும் - நீக்கும்.
௧௦௯௩ ஆற்றுதல் - செய்தல்.
௧௦௯௪ துப்புரவு - உணவுமுத லியன.
௧௦௯௯ ஆறு அறிவினர் - ஐம் பொறி யறிவுகளையும் பகுத்தறிவையும் கொ ண்டுள்ள மனிதர்.
௧௧௦௩ அளிப்பவர் - இரட்சிப் பவர்.
௧௧௦௬ முகை - அரும்பு.
,, அனர் - போன்றவர்.
௧௧௧௨ போன்ம் - போலும்.
௧௧௧௭ உகுத்தவர் - சிந்தியவர்; விடுத்தவர்.
௧௧௧௮ ஊறு - துன்பம்.
௧௧௨௩ காவினில்-மறைவில்.
௧௧௩௩ இயற்கு-தன்மைக்கு.
௧௧௪௮ நிரயம் - நரகம்.
,, கழி - மிக.
௧௧௫௯ ஆடி - கண்ணாடி.
௧௧௬௦ அடுதல் - கொல்லுதல்.
௧௧௭௦ உறுத்தும் - வருத்தும்.
௧௧௭௮ சமன் - எமன்.
௧௨௦௧ கரி - சாக்ஷியம்.
௧௨௧௧ அடங்கிய-புலப்படாத.
௧௨௩௮ ஆணவம்-அகங்காரம்.
௧௨௫௦ ஆற்றி - செய்து.

அரும்பதவுரை முற்றிற்று.

---



மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
8071a